விலை: 30.00
பக்கங்கள் : இருபது

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2034)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 20 திங்கட்கிழமை (03.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 135

## நேற்று மட்டும் 1,891 பேருக்கு கொரோனா

19ஆம் பக்கம் பார்க்க

## கொரோனாத் தொற்று தீவிரம்; வீடுகளிலும் நிகழ்வுகளுக்குத் தடை!



### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு

(கொழும்பு)

விருந்துபசாரங்கள், கூட்டங்கள் மற்றும் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளை வீடுகளிலும் நடத்த முடியாது என இராணுவத் தளபதியும் கோவிட் தடுப்பு செய 19

## தமிழக சட்டமன்றத் தேர்தல்

# தி.மு.க. அமோக வெற்றி முதல்வராகிறார் ஸ்டாலின்



### இன்று பதவியேற்பு

( சென்னை )

தமிழக சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் பல இடங்களில் அமோக வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது.

இதன்மூலம் முதல் முறையாக தமிழக முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் தெரிவாகியுள்ளார். இவர் முதலமைச்சராக இன்று பதவியேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் 234 சட்டமன்றத் தொகுதிகளில் வெளியாகியுள்ள முடிவுகளின்படி தி.மு.க. தனித்து 122 தொகுதிகளிலும் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து 157 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளது. 19

## பருத்தித்துறையில் கைக்குண்டு மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை, கொட்டடிப் பகுதியில் பழமைவாய்ந்த கைக்குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக் 19

## வவுனியா சுகாதாரத் திணைக்கள நோயாளர் காவு வண்டி சாரதிக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள நோயாளர்காவு வண்டி சாரதிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் எழுமாறாக பிசிஆர் பரிசோதனை 19

## சுகாதார விதிகளை மீறி ஆலயத்தில் திருவிழா

### நான்கு பேர் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

கொரோனா சுகாதார விதி முறைகளை மீறி ஆலயத்தில் திருவிழா நடத்திய உபயகாரர் உள்ளிட்ட நான்கு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

காரைநகர் களபூமிப் பகுதியில் உள்ள ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் நடை பெற்று வருகின்றது. 19

## வடக்கில் 7 பேருக்கு நேற்று கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 3 பேர் உட்பட வடக்கில் 7 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், யாழ்.போதனா வைத்தியசாலை 19

## காங்கேசன்துறையில் புத்தர் சிலை உடைப்பு

### சந்தேகத்தில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

புத்தர் சிலையை உடைத்த குற்றச்சாட்டில் ஒருவரை காங்கேசன்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை, நல்லிணக்கபுரத்துக்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறை கடற்படை வழங்கிய 19

## வரணியில் வாள்வெட்டு

### இளைஞன் காயம்

(வரணி)

தென்மராட்சி-வரணி சந்தைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் 19

## தனியார் பேருந்துகள் இன்றுமுதல் 25 வீதம் மாத்திரமே சேவையில்

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர்

(கொழும்பு)

இன்று திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 25 வீத தனியார் பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடவுள்ளன என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் [illegible] 19

## கொரோனாவினால் நேற்று +9 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகிமேலும் 09 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில்கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 696 ஆக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ஞா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. கந்தசாமி இராஜகுலசிங்கம்**

அதிபர்

(SLPS - 1, BED, SPECIAL Tr.Maths)

**கல்விச் சேவையில் 1982 - 2021 வரை**

**ஆசிரியர் சேவையில்**

- 1990.03.15 - 1994.01.31 வரை மு/அம்பலவன் பொக்கணை ம.வி
- 1994.02.01 - 1995.09.31 வரை மு/முல்லைத்தீவு ம.வி
- 1995.10.01 - 1998.12.31 வரை மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
- 1999.01.01 - 2003.02.10 வரை மு/வித்தியானந்தா கல்லூரி
- 2003.02.11 - 2004.06.30 வரை மு/தண்ணீரூற்று இ.த.க.பாடசாலை ஆசிரியராகவும்

**அதிபர் சேவையில்**

- 2004.07.01 - 2015.07.07 வரை மு/கருநாட்டுக்கேணி அ.த.க பாடசாலை அத்துடன் பதில் அதிபராக
- 2010 - 2012 காலப்பகுதியில் மு/தண்ணீரூற்று முஸ்லிம் ம.வி, மு/தண்ணீரூற்று சீ.சீ பாடசாலை, மு/கொக்குத்தொடுவாய் அ.த.க பாடசாலை
- 2015.07.08 - 2021.04.24 வரை மு/உண்ணாப்புலவு தமிழ் வித்தியாலய அதிபராகவும் கடமையாற்றி

25.04.2021 அன்று மணிவிழா கண்டமையையும் 2016.02.19 அன்று அதிபர் சேவை தரம் I இல் பதவி உயர்வு பெற்றமையையும் இட்டு மனமார பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுநிலைக் காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம்வல்ல ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரப் பெருமான் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*

**அம்மா - தங்கமணி கந்தசாமி**

**சகோதரர்கள் - மனோகரி, மனோகராம்பாள், மதியழகன், மயூரதன், மன்மதன், இராஜகுலேந்திரன்**

**7ஆம் வட்டாரம், குமுளமுனை, முல்லைத்தீவு.**

(6776)


## இலங்கை கிரிக்கெட் வீரர்

# உபுல் தரங்கவுக்கு கொரோனாத் தொற்று




இலங்கை கிரிக்கெட் அணியின் முன் னாள வீரர்களில் ஒருவரான உபுல் தரங்கவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட் டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா 3ஆவது அலை தொற்று பரம்பல் அதிகரித்துவரும் நிலையில தினமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு வருகின் றது.

இந்நிலையில் தற்போது பிரபலங்களும் தொற்றுக்குள் ளாகும் நிலை ஏறபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஞா)


# கண்ணீர் அஞ்சலி

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரும் இலங்கை சாரணர் சங்க யாழ். மாவட்டக் கிளை செயற்குழுத் தலைவருமாகிய திரு. **இ.இளங்கோவன்** அவர்களின் அன்புத் தாயார்



**திருமதி மகேஸ்வரி இலட்சுமணன்**

அவர்கள் கடந்த 28.04.2021 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

**செயற்குழு உறுப்பினர்கள், இலங்கை சாரணர் சங்கம், யாழ். மாவட்டக் கிளை.**

(6781)

# மரண அறிவித்தல்



**திருமதி**

# இரத்தினேஸ்வரி கந்தசாமி

**(தையல் ஆசிரியை)**

கோண்டாவில், ஸ்ரேசன் றோட்டைப் பிறப்பிடமாகவும் நயினாதீவில் வசித்து வந்தவரும் தற்போது ஸ்ரேசன் றோட் கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமாகிய திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி நேற்று முன்தினம் (01.05.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் சிவசம்பு - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நயினாதீவு நாகநாதி - காமாட்சி தம்பதிகளின் ஆசை மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் (ஓய்வுபெற்ற நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிராமசேவகர்) அன்பு மனைவியும் தாட்சாயினியின் அன்புத் தாயாரும் தனசீர்த்தனனின் அன்பு மாமியும் தங்கேஸ்வரி, காலஞ்சென்ற இராசேஸ்வரி மற்றும் சிவநேசன், குணநேசன், செல்வநேசன், தேவநேசன், மகாதேவன், ரவிநேசன், நவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கமுத்து, சின்னம்மா, காலஞ்சென்ற மாணிக்கம், நாகலெட்சுமி, செல்லம்மா, இந்திராணி, மங்கையற்கரசி, செல்வ நாயகி, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.05.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**

(6779)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கொரோனா கோர தாண்டவம்

# வடக்கு கடற்பரப்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது- இந்திக்க

**(கொழும்பு)**

**இலங்கையின் வடக்கு கடற்பரப்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.இந்தியாவில் நிலவிவரும் கொவிட் பெருந்தொற்று நிலைமைகளினால் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

கொவிட் பெருந்தொற்று தீவிரமடையும் நிலையில் இந்தியர்கள் அண்டை நாடுகளுக்கு தப்பிச் செல்ல முயற்சிப்பதாக கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே வடக்கு எல்லைப் பகுதியை பாதுகாப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கடற்பரப்பு மற்றும் கரையோரப் பகுதிகளில் தீவிர ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், சில இந்தியர்கள் படகு மூலம் நாட்டுக்குள் அண்மைய நாட்களில் பிரவேசித்துள்ளமை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி-4)

## 5 ஆம் திகதிக்கு முன் பரீட்சைப் பெறுபேறுகள்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் மே 5 ஆம் திகதி வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

முன்னதாக இப் பரீட்சை முடிவுகளை ஏப்ரல் 30இற்கு முன்னர் வெளியிட திட்டமிடப்பட்டது.

2020 உயர்தரப் பரீட்சை முடிவுகள் இறுதி கட்டத்தில் உள்ளன. முடிவுகளை வெளியிடுவதற்கு முன்பு, கணக்கிடப்பட்ட Zscores மதிப்பெண்கள் இருமுறை சரிபார்க்கப்பட வேண்டும் என்று பரீட்சை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த நடவடிக்கை தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. செயல்முறை முடிந்ததும் முடிவுகளை மே 5 அல்லது அதற்கு முன்னர் வெளியிட முடியும் என்றும் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

முடிவுகளின் அடிப்படையில், 2021 செப்டெம்பர் மாதத்துக்குள் மாணவர்களை பல்கலைக்கழகங்களில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முடிவுகள் வெளியானதும் மாணவர்கள் கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளமான www.doenets.lk யில் பார்வையிடலாம். (நி-4)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் சேவையில் விசேட அதிரடிப்படையின் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதாக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை பூர்த்தி செய்து பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு பிரிவு, இல. 375 , 1ம் மாடி ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்த, கொழும்பு 06 அல்லது கட்டளை அதிகாரி விசேட அதிரடிப்படை தலைமையகம், இல. 223 பௌத்தயோக மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு நேற்று 02 ம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலை பார்வையிடவும். (நி-4)

## மஹிந்தானந்த சுயதனிமைப்படுத்தலில்



(கொழும்பு)

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் சாரதி மற்றும் அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்படுத்தப்பட்டதையடுத்து அமைச்சர் இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (நி-4)

## ஆட்பதிவுத் திணைக்களம் மீள் அறிவித்தல் வரை பூட்டு




(கொழும்பு)

மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்கும் நோக்கில், ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் அனைத்து பிரதேச அலுவலகங்களினால் வழங்கப்படும் சேவைகள் மீள அறிவிக்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை பிரதேச அலுவலகங்களில் வழங்க முடியுமென அவர் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் நாட்களில், முன்பதிவு செய்து கொண்ட விண்ணப்பத்தாரர்களுக்காக தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கை தபால் மூலம் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் பரீட்சைகள் தொடர்பாக, கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்ளல் போன்ற அவசர தேவைகளுக்காக தேசிய அடையாள அட்டையை பெற வேண்டுமென்றால் பிரதான அலுவலகத்தின் 0115 226 126 அல்லது 0115 226 100 என்ற தொலைபேசி எண்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (நி-4)

## முதலாளித்துவ போக்கில் அரசாங்கம்

### சஜித் பிரேமதாச பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச தொழிலாளர் தினத்தை கொண்டாடுவதற்கு தடை விதித்து அவர்களின் உரிமைகளை முடக்கி உயர் மட்டத்திலுள்ளவர்களை பாதுகாப்பதற்கான முதலாளித்துவ போக்கில் அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறான சூழலை மாற்றியமைக்கக் கூடிய பலம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் மாத்திரமே காணப்படுகிறது என்று எதிரக்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் முகப்புத்தக நேரலையூடாக உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், தொழிலாளர்களின் கரங்களால் ஆட்சியைக் கைப்பற்றிய இந்த அரசாங்கம் அவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக , அவர்களிடமிருந்து அதனைப்பறித்து முதலாளிமாருக்கே வழங்கியுள்ளனர். வரி நிவாரணம் ஊடாக முதலாளி வர்க்கத்தினருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சலுகைகளினால் நாட்டுக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாகவே தொழிலாளர்களுக்கு திருப்தியடைக் கூடிய வாழ்வாதாரம் கிடைக்கப் பெறாமலுள்ளது.

அரச அதிகாரம் கிடைத்தவுடன் தொழிலாளர்களை ஆட்சியாளர்களாக்குவதாக கூறினார்கள். ஆனால் தற்போது தடை விதித்து , தொழிலாளர்களின் உரிமையை முடக்கி அவர்களை புறந்தள்ளி, நாட்டில் உயர் மட்டத்திலுள்ளவர்களை பாதுகாப்பதற்கான முதலாளித்துவ போக்கில் பயணித்துக் கொண்டிருக் கிறார்கள் என அவர் தெரிவித்தார். (நி-4)

## இணையமூடாக கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை- கல்வி அமைச்சு

(கொழும்பு)

பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் காலப் பகுதியில் இணையத்தளத்தின் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய குறித்த வேலைத்திட்டங்களின் மூலமாக மாணவர்கள் பயனடைய முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதன் பின்னரும் குறித்த வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

பாட விதானங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாத விடுமுறையை மட்டுப்படுத்துவது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஹசன் அலி அபார பந்துவீச்சு

# டெஸ்ட் கிரிக்கெட்டில் சிம்பாவேயை வீழ்த்தி

# பாகிஸ்தான் இன்னிங்ஸ் வெற்றி


சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள பாகிஸ்தான் அணி இருபது-20 மற்றும் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலில் நடந்த 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 2-1 என கைப்பற்றியது. இதையடுத்து இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹராரேயில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.

டொஸ் வென்ற சிம்பாவே அணி முதலில் பட்டிங்கை தேர்வு செய்தது. பாகிஸ்தான் வீரர்களின் அபார பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் முதல் இன்னிங்சில் 59.1 ஓவர்களில் 176 ரன்னில் சுருண்டது.

அந்த அணியில் அதிகபட்சமாக ராய் கையா 48 ரன்கள் எடுத்தார்.

பாகிஸ்தான் அணி சார்பில் ஷகீன் ஷா அப்ரிடி, ஹசன் அலி தலா 4 விக்கெட் வீழ்த்தினார்கள்.



இதையடுத்து, பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சை தொடர்ந்தது.

அபித் அலி 60 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அசார் அலி 36 ரன்னும், கப்டன் பாபர் அசாம் ரன் எதுவும் எடுக்காமலும் அவுட்டாகினர். சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இம்ரான் பட் 91 ரன்னில் வெளியேறினார்.

அடுத்து இறங்கிய ரிஸ்வான் 45 ரன்னிலும், பஹீம் அஷ்ரப் டக் அவுட்டாகி வெளியேறினர். ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் சிறப்பாக ஆடிய பவாத் ஆலம் சதமடித்து அசத்தினார்.

இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் அணி 120 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 374 ரன்கள் எடுத்துள்ளது.

பவாத் ஆலம் 108 ரன்னுடனும், ஹசன் அலி 21 ரன்னுடனும் அவுட்டாகாமல் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில், மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று முந்தினம் நடைபெற்றது.

இறுதியில், பாகிஸ்தான் அணி 133 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 426 ரன்கள் எடுத்தது.

சிம்பாவே அணி சார்பில் முசராபானி 4 விக்கெட்டும், டொனால்ட் டிரிபனோ 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து 250 ரன்கள் பின்தங்கிய நிலையில் சிம்பாவே அணி இரண்டாவது இன்னிங்சை ஆடியது.

பாகிஸ்தான் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் சிம்பாவே அணி 134 ரன்களில் சுருண்டது.


இதனால் பாகிஸ்தான் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 116 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மூன்றாவது நாளிலேயே ஆட் டம் முடிவுக்கு வந்தது.

ஆட்ட நாயகன் விருது இரு இன்னிங்சிலும் சேர்த்து 9 விக்கெட் வீழ்த்திய ஹசன் அலிக்கு வழங்கப்பட்டது. (4-6)

## வோர்னர் நீக்கம்
## வில்லியம்சன் நியமனம்





ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஐதராபாத்சன்ரைசர்ஸ் அணி இதுவரை 6 ஆட்டங்களில் விளையாடி 5இல் தோல்வி, ஒரு வெற்றி என்று 2 புள்ளியுடன் கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

சென்னைக்கு எதிரான ஆட்டத்தில் ஐதராபாத் கப்டன் டேவிட் வோர்னர் 55 பந்துகளில் 57 ரன்கள் மட்டுமே எடுத்தார்.

தனது மந்தமான பட்டிங்கே தோல்விக்கு காரணம் என்று பகிரங்கமாக ஒப்புக் கொண்டார்.

அவரது மோசமான செயற்பாட்டால் அணி நிர்வாகம் கடும் அதிருப்திக்குள்ளானது.

டெல்லிக்கு எதிரான ஆட்டத்தில் மனீஷ் பாண்டேவை நீக்கியது தேர்வாளர்கள் தான் என்று வெளிப்படையாக விமர்சித்தார்.

இந்த நிலையில் ஐதராபாத் அணியின் கப்டன் பொறுப்பில் இருந்து வோர்னர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு பதிலாக எஞ்சிய போட்டிகளில் கேன் வில்லியம்சன் அணியை வழிநடத்துவார் என்று ஐதராபாத் நிர்வாகம் நேற்று முன்தினம் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

## கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்-2021
## 2-வது சுற்றுக்கு அரியாலை சென்றல் தகுதி

கே.சி.சி.சி. 28 ஆவது ஆண்டாக நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் முதலாவது சுற்றின் 8 ஆவது போட்டி கடந்த வார இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அரியாலை சென்றல் அணி சிறிகாமாட்சி அணியை 8 இலக்குகளால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 24 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.

துவாரகன்-33, சயந்தன்-23, தர்ஸன்-21 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் அரியாலை சென்றல் அணி சார்பாக லிதுர்ஜன்-04, ஜனன்-02, சதீஸ், சுஜீவன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் அணி 13.2 ஓவர்களில் இரண்டு இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சிந்துயன் ஆட்டமிழக்காது-25, கிருபா-60, பிரிசங்கர் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

களத்தடுப்பில் சிறிகாமாட்சி அணி சார்பாக பிரதாப்-02 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற அரியாலை சென்றல் அணி 2 ஆவது சுற்றில் யாழ். ஜொனியன்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படாது உறுதி படத் தெரிவித்தார் உதய கம்மன்பில



(கொழும்பு)

நாட்டுக்குள் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என தெரிவிக்கப்படும் செய்தியில் எந்த உண்மையும் இல்லை. அத்துடன் டொலரின் பெறுமதி மேலும் அதிகரிக்கப்படாமல் நிலையாக வைத்திருக்க முடியும் என்ற உறுதியை வழங்கினால் எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது என்ற உறுதியை வழங்க முடியும் என மின்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டுக்குள் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படப்போவதாக தெரிவிக்கப்படும் செய்தி உண்மைக்கு புறம்பானது. அவ்வாறான எந்த நிலையும் இல்லை. தேவையான எரிபொருள் தொகை நாட்டுக்குள் இருப்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன்.

ஒவ்வொரு நாளும் காலை 7 மணியளவில் நாட்டில் இருக்கும் எரிபொருள் வகைகளின் அளவு குறித்த தொகையை குறுந்தகவல் செய்தி ஊடாக நான் பெற்றுக்கொள்கின்றேன். இது தொடர்பாக நான் தனிப்பட்ட முறையிலும் நாளாந்தம் தேடிப்பார்க்கின்றேன். அதனால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றார்.

மேலும், எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படுவதாகவும் பலராலும் தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருட்களின் விலை அதிகரிப்பது தொடர்பாக இதுவரை எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. இருந்தபோதும் உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று டொலரின் பெறுமதியும் அதிகரித்து செல்கின்றது.

எமது நாட்டில் 2019 செப்டெம்பர் முதலாம் திகதிக்கு பின்னர் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் தற்போதும் எரிபொருட்களினால் ஏற்பட்டு வரும் நட்டத்தை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்றுக்கொண்டு, மக்களுக்கு அதன் நிவாரணத்தை வழங்கி வருகின்றோம்.

இந்த நட்டத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலை வந்தால் அதுதொடர்பில் நாங்கள் மக்களுக்கு அறிவிப்போம். அதனால் எரிபொருட்களின் விலையை அதிகரிக்க இது வரைக்கும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார். (நி-4)

# தாய் இறந்தது கூட தெரியாமல் பால் கேட்டு அழுத குழந்தை

(டில்லி)

தாய் இறந்தது கூட தெரியாமல் சடலத்துக்கு அருகில் அமர்ந்து பால் கேட்டு அழுது கொண்டிருந்த குழந்தையை பொலிஸார் மீட்டுள்ளனர். இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலம், புனேவில் உள்ள கிராமம் ஒன்றில் தாய் ஒருவர் தனது 18 மாத குழந்தையுடன் தனியாக வசித்து வந்துள்ளார்.

மேற்படி தாய் உடல் நலக்குறைவால் அண்மையில் உயிரிழந்துள்ளார்.

அவர் உயிரிழந்து இரண்டு நாட்களின் பின்னர் துர்நாற்றம் வீசியதாகவும் இதனையடுத்து பிரதேசவாசிகள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இறந்த தாயுடன் இருந்த பச்சிளம் குழந்தையை மீட்டுள்ளனர்.

இக்குழந்தை தனது தாய் உயிரிழந்ததால் இரண்டு நாட்களாக பால் இன்றி பசியில் வாடியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

கொரோனா அச்சம் காரணமாக பிரதேசவாசிகள் எவரும் குழந்தையை மீட்க முன்வரவில்லை எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், குழந்தையை மீட்ட பொலிஸார் குழந்தைக்கு கொரோனா பரிசோதனை செய்ததுடன் குழந்தைக்கு பால் மற்றும் உணவு என்பவற்றை கொடுத்துள்ளனர். (நி-4)

## தபால் ஊழியர்கள் 21 பேருக்குத் தொற்று

(கொழும்பு)

கொழும்பு - கொம்பனித் தெரு தபால் நிலையத்தின் ஊழியர்கள் 21 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

45 ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் இவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

# உல்லாசப் பயணிகள் பெருமளவில் படையெடுப்பு



(கொழும்பு)

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் தலைதூக்கியுள்ள நிலையில் கடந்த வார இறுதியில் நீண்ட விடுமுறையைக் கழிப்பதற்காக பெருமளவான உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் மாத்தளை-ரிவஸ்டன்பிட்டவல பிரதேசத்துக்கு வருகை தந்திருந்தனர்.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்ததுடன் இவர்களுள் பெரும்பாலானவர்கள் கொரோனா சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இந்தியர்களுக்கான தனிமைப்படுத்தலை இரண்டு வாரங்களாக உயர்த்த தீர்மானம்

(கொழும்பு)

இந்தியாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வருகின்றது. இதன் காரணமாக பல்வேறு உலக நாடுகள் இந்தியாவுடனான விமான சேவையை இடைநிறுத்தி வைத்துள்ளன.

இந்நிலையில் இலங்கை அரசானது இந்தியாவுடனான விமான போக்குவரத்தில் மாற்றமொன்றினை ஏற்படுத்தி விமான சேவையைத் தொடரத் தீர்மானித்துள்ளது.

அந்தவகையில் இந்தியாவிலிருந்து வரும் பயணிகளைத் தனிமைப்படுத்தும் கால அளவை ஏழு நாட்களிலிருந்து இரண்டு வாரங்களாக உயர்த்த இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே இந்தியாவில் இருந்து பயணிகள் விமானங்கள் தொடர்ந்து இலங்கைக்கு வருவதாலும் தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை இரண்டு வாரங்களுக்கு நீட்டிப்பது கொவிட் தொற்றாளர்களைக் கண்டறிய போதுமானதாக இருக்கும் என்பதாலும் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (நி-4)

# நுவரெலிய தொற்றாளர்கள் வசந்தகால கொண்டாட்டத்தில் பணி புரிந்தவர்களே



(நுவரெலியா)

நுவரெலியா பொலிஸ் நிலையத்தின் பெண் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் என 5 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர்கள் கண்டி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தொற்றாளர்கள் நுவரெலியா வசந்த கால கொண்டாட்டங்களில் கடமை புரிந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் கண்டி மாவட்டத்தில் 84 பேருக்கும் நுவரெலியா மாவட்டத்தில் 56 பேருக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கடந்த ஆண்டில் பெருந்தோட்டத்துறை பணிப்புறக்கணிப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்டத்துறையில் இடம்பெற்ற பணிப்புறக்கணிப்புகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2019 உடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் பணிப்புறக்கணிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை யாராலும் தடுக்க முடியாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(முறிகண்டி)

**இறந்தவர்கள் அல்லது கொல்லப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அவர்களை நினைவுபடுத்துவது அல்லது அவர்களிற்கு மத அஞ்சலி செலுத்துவதை யாரும் தடுக்க முடியாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலாக இருக்கலாம், அல்லது பாராளுமன்ற தேர்தலாக இருக்கலாம், நான் மக்களிடம் கேட்டது எனக்கு கூடிய வாக்குகளையும், ஆசனங்களையும் கொடுத்தால் மக்கள் எதிர்கொள்ளுகின்ற சகலவிதமான பிரச்சினைகளும் அரசியல், அபிவிருத்தி மற்றும் அன்றாட பிரச்சினைகளாக இருக்கலாம், மிக குறுகிய காலத்திற்குள் தீர்வு பெற்றுத்தருவேன் என கூறினேன்.

கொவிட் பரவலால் நாடு முழுவதும் வணக்க ஸ்தலங்கள் அனைத்திலும் தடைகள் விதிக்கப் பட்டுள்ளது.

கொவிட் பரவலைக்கட்டுப் படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இவ்வாறு தடைகள் விதிக்கப்பட்டுள்ளது. அது இலங்கையில் மாத்திரமல்ல, உலகலாவிய ரீதியில் இந்த நிலை இருக்கின்றது.

அதனால் இலங்கையும் அந்த இலக்கை நோக்கி போகலாம்.

ஆனால் இங்கு இருக்கக் கூடிய விசேட அரசியல் பிரச்சினை என்ன என்றால், இறந்தவர்கள், அல்லது கொல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்களது உறவுகள் அவர்களை நினைவுப்படுத்துவது அல்லது அவர்களிற்கு மத அஞ்சலி செலுத்துவதை யாரும் தடுக்க முடியாது.

எந்த இடத்தில் எங்கு நடந்தது என்பது யாருக்கும் தெரியாது.

அவர்கள் தமது வீடுகளில் இவ்வாறு செய்வதை யாரும் தடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

(5-4-100)

# கிளைச் சங்கத்திற்கு கட்டடம் அமைக்க கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலை மையாகக் கொண்ட வரணி வடக்கு (கிளை இல. 8) கிளை விற்பனை நிலையத்திற்கு புதி தாக கட்டடம் ஒன்றினை அமை த்துத் தருமாறு கிளைக் குழு வினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில், தற்போது சங்கக் கிளை இயங்குகின்ற கட்டடம் வெடிப்புக்குள்ளாகி இடிந்து விழும் அபாயம் காணப்படுவதாக கவலை தெரிவித்துள்ள னர்.

மழை காலங்களில் ஒழுக்குகள் ஏற்பட்டு கட்டடத்தின் உள்ளே நீர் தேங்கி நிற்பதனால் பொருட்கள் சேதமடைவதாகவும் உள்ளது. சிறு பாதிப்புக்க ளைச் சீர் செய்கின்ற போதும் ஆனால் குறுகிய காலத்தில் மீண்டும் பாதிப்படைகின்றன.

இவ் விடயம் தொடர்பாக எழுத்து மூலம் தலைமைப் பணி மனைக்கு தெரியப் படுத்தியுள்ளதாகவும் பொதுச் சபைக் கூட்டங்களின் போதும் பிரேரணைகளாக முன்மொழிந்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே எதிர்வரும் மாரி கால த்திற்கு முன் கட்டடமொன்றை அமைத்துத் தருமாறு நுகர்வோரும், கிராம பொது அமைப்புக்களும், கிளை உறுப்பினர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (5-4-103)

# பயிற்றுவிப்பாளர் உட்பட 23 பேர் தனிமைப்படுத்தல்

(நல்லூர்)

வடமராட்சி, துன்னாலை மேற்கில் சுகாதாரத்துறையின் அறிவுறுத்தலை மீறி கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபட்ட பயிற்றுவிப்பாளர் உட்பட 23 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.


அத்துடன் பயிற்றுவிப்பாளர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கையின் பின்னர் சுயதனிமைப் படுத்தப்பட்டார். துன்னாலை மேற்கில் உள்ள விளையாட்டுக் கழகத்தில் கடந்த சில தினங்களாக கிரிக்கெட் பயிற்சி இடம்பெற்று வந்துள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டலின் அடிப்படையில் பயிற்சியில் ஈடுபட வேண்டாம் என்று அப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் அறிவுறுத்தப்பட்டது.

அதனையும் மீறி நேற்றுக் காலையிலும் பயிற்சி இடம் பெற்றுள்ளது. அது தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரினால் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

மைதானத்துக்குச் சென்ற பொலிஸார், பயிற்சியாளரைக் கைது செய்தனர்.

பயிற்சியாளர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன், அவரும் பயிற்சியில் கலந்து ஈடுபட்டிருந்த 22 பேரும் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். (5-4-33)




கஜநீதன் ஸ்ரீகுமார் தயாரிப்பிலும் அஜிதன்- ஜே இயக்கத்திலும் உருவான அகோரன்-2 திரைப்பட இரண்டாம் பார்வை நேற்று முன்தினம் முதலாம் திகதி **KGF** திரைப்பட ஒளிப் பதிவாளர் புவன் கௌடா **KGF** திரைப்பட கலை இயக்குநர் சிவகுமார் ஜே. ஜிந்து ஜோசப் ஆகியோரால் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

# மாநகர, நகரசபை எல்லைகள் நிர்ணயம் செய்ய நடவடிக்கை

(நல்லூர்)

யாழ்.மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை மற்றும் வலிதெற்கு பிரதேச சபைக்கான எல்லைகளை நிர்ணயம் செய்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட ஒரு பிரதேசம் நல்லூர் பிரதேச சபைக்கானது என்ற கோரிக்கையின் பிரகாரம் எழுந்த சர்ச்சையை அடுத்து அது தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவினை எடுக்கும் முகமாக இக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பிரச்சினைகள் நீண்டு செல்வது உகந்தது அல்ல. அவ்வாறு இப் பிரச்சனை நீடிக்கப்படுவதன் காரணமாக பாதிக்கப்படப் போவது நல்லூர் பிரதேச சபையே அன்றி யாழ்.மாநகர சபை அல்ல. யாழ்.மாநகர சபை போல் நல்லூர் பிரதேச சபையும் ஒரு நகர சபையாகவோ மா நகர சபையாகவோ தர முயர்த்தப்பட வேண்டும். அதற்கு அடிப்படையானது இந்த எல்லை நிர்ணயம் எனவே அதனைக் கருத்திற் கொண்டு விட்டுக் கொடுப்புடன் ஒரு இணக்கப் பாட்டுக்கு வரவேண்டும் என்றார்.

யாழ்.மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் அவர்கள் நல்லூர் பிரதேச சபை தங்களுடைய பகுதி என்று உரிமை கூறும் இடங்களில் உள்ள ஆதனங்கள் எதுவும் நல்லூர் பிரதேச சபைக்குரியதாக இல்லை. அவை மாநகர சபைக்குரியது. அவர்கள்



தங்களுடைய வரிகளினை மாநகர சபைக்கே செலுத்துகின்றார்கள். எனவே நல்லூர் பிரதேச சபை கோருகின்ற பகுதிகளை எம்மால் வழங்க முடியாது என்றும் ஆனால் தொழிநுட்ப கல்லூரியின் ஒரு கட்டடப் பகுதியின் நடுவே மாநகர சபையின் எல்லைக் கோடு செல்வதனால் அக் கட்ட டப்பகுதியினை முழுமையாக நல்லூர் பிரதேச சபைக்கு விட்டுக் கொடுக்க இணக்கம் தெரிவிக்க முடியும் என்று தெரிவித்தார்.

இவ்விடயத்தில் கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் அவர்கள் தற்போது மாநகர சபைக்கு ஆதனவரிகளைச் செலுத்திக் கொண்டு இருப்பவர்களை பிரதேச சபைக்கு மாற்ற முடியாது அதன் அடிப்படையில் மாநகர சபை தமக்குரியது என்று கூறுகின்ற பகுதிகளுக்குள் உள்ளவர்கள் மாநகர சபைக்கே தங்களுடைய ஆதனவரிகளைச் செலுத்திக் கொண்டிருப்பதனால் அப் பகுதி மாநகர சபைக்கே உரியது. எனவே குறித்த பகுதி மாநகர சபைக்கே உரியது என்ற இணக்கப்பாட்டிற்கு வருவோம் என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து நல்லூர் பிரதேச சபை மற்றும் வலிதெற்கு பிரதேச சபைகளின் எல்லைகளை நிர்ணயம் செய்கின்றமை தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் மகேசன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர்கள், யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில் பிரதேச செயலாளர்கள், யாழ்.மாநகர முதல்வர், நல்லூர் பிரதேச சபைத் தலைவர், வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர், யாழ்.மாநகர ஆணையாளர், ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

(5-33-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது இடங்களில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக்குங்கள்

(கொழும்பு)

வர்த்தக நிலையங்கள், சந்தைகள் மற்றும் வெதுப்பக உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையங்கள், சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி இயங்குவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டலின்படி, குறித்த இடங்கள், முழுமையான நுகர்வோர் கொள்ளளவில், 25 சதவீதத்தினருடன் இயங்க வேண்டும்.

எனினும், நாட்டின் பிரதான நகரங்களில் உள்ள பல வர்த்தக நிலையங்கள், இந்த தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், இருவருக்கு இடையில், இயன்றளவு சமூக இடைவெளியுடன் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. (நி-4)

## பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு-1(அ) தரத்திற்கு வழிகாட்டலும் ஆலோசனையும் பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2021**

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.05.24 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk→Recruitment and Exam→ Advertisement** என்று வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களைப் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

சி.திருவாகரன், செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம். 30.05.2021 (C-2087)

## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1996 இந்து நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: -செவ் 1 சூரி4 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Student Under Graduate<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி UK மட்டும்<br>தொ.இ: B/11840 | பிறப்பு: 1998 இந்து நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: -செவ்.சூரி6 இல் உயரம்:4'5"<br>தகைமை/தொழில்:. A/L விற்பனைப் பிரதிநிதி<br>எதிர்பார்ப்பு:தனியார் வேலை, வெளிநாடும் பார்க்கலாம்.<br>தொ.இ:G/11858 |
| பிறப்பு:1990 இந்து நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 15செவ் 11 சூரி 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பொறியிலாளர்.BSc, Work-Software Eng<br>எதிர்பார்ப்பு:வைத்தியர்.பொறியிலாளர் / தகுந்தவரன். வெளிநாடும் பார்க்கலாம்.<br>தொ.இ: B/11842 | பிறப்பு:1990 இந்து நட்சத்திரம்:சதயம்<br>கி.பா:20.5 செவ் 11 சூரி2 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: B.Aபட்டதாரி. முகாமைத்துவ பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர். முகாமைத்துவ உதவியாளர் . உள்நாடுமட்டும்<br>தொ.இ:G/11860 |
| பிறப்பு:1988 இந்து நட்சத்திரம்:பூசம்<br>கி.பா:செவ் 1 சூரி4 இல்<br>உயரம்:173cm<br>தகைமை/தொழில்: M.B.B.S.வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:Doctor,Accountant,Eng. உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11844 | பிறப்பு:1991 இந்து நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா:8செவ்6 சூரி5 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: B.A, முகாமைத்துவ உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில். பட்டதாரி. உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/11863 |
| பிறப்பு:1995 இந்து நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 2சூரி9இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: NDT,Engineer. சிட்னி கம்பனி இன்ஜினியர்<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்.வெளிநாடும்<br>தொ.இ: B/11848 | பிறப்பு: 1998இந்து நட்சத்திரம்:சதயம்<br>கி.பா:45 ½செவ் 11 சூரி1 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: மருத்துவபீட மாணவி<br>எதிர்பார்ப்பு: படிப்பும் நல்ல குணமுள்ள வெளிநாட்டு மாப்பிள்ளை.<br>தொ.இ:G/11865 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# உலகில் கொரோனாவால் பாதிக்கப்படும் இருவரில் ஒருவர் இந்தியர்

(டில்லி)

**உலகில் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களில் இரண்டில் ஒருவர் இந்தியாவை சேர்ந்தவராக இருக்கிறார்.**



இந்தியாவில் கொரோனா தொற்று பரவல் வேகம் மிக அதிகமாக உள்ளது.

நேற்று முன்தினம் நாடு முழுவதும் 4 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தின நிலவரப்படி 3 இலட்சத்து 92 ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது.

தற்போது உலகளவில் பல நாடுகளில் நோய் கட்டுக்குள் உள்ளது.

இதனால் நோய் பரவல் வேகமும் குறைந்துள்ளது. ஆனால் இந்தியாவில் மட்டும் 2-வது அலை அதிகம் பேரை தொற்றி வருகிறது.

இதன் அடிப்படையில் பார்க்கும் போது உலகில் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களில் இரண்டில் ஒருவர் இந்தியாவை சேர்ந்தவராக இருக்கிறார்.

இந்தியாவில் மராட்டிய மாநிலத்தில்தான் நிலைமை மிக மோசமாக இருக்கிறது. நேற்று 62 ஆயிரம் பேரை தாக்கி உள்ளது. 3.673 பேர் பலியாகி உள்ளனர்.

இந்தியாவின் ஒட்டு மொத்த பாதிப்பின் 14 சதவீதம் மராட்டியத்தில் உள்ளது. 40 ஆயிரம் பேருடன் 2-வது இடத்தில் கர்நாடகாவும். 35 ஆயிரம் பேருடன் 3ஆவது இடத்தில் கேரளாவும் உள்ளன. (நி-4)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம் 11/140, மூளாய் 2ம் ஒழுங்கை, வட்டாரம்-04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை. சுழிபுரம் உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம்-04 மூளாய் ஒழுங்கையிலுள்ள இல.11/140 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை நாகமுத்தன் கணபதி என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4808/06.10.1959ம் இலக்க உறுதியால் கார்த்திகேசு கந்தையாவும். கார்த்திகேசு குமாரசாமியும். சுப்பிரமணியம் கைம்பெண் மனோன்மணியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

நாகமுத்து சின்னராசா பிரசித்த நொத்தாரிசு வே. நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 13038/25.05.1969ம் இலக்க உறுதியால் குறித்த நாகமுத்தன் கணபதி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த நாகமுத்து சின்னராசா காலஞ்செல்ல குறித்த ஆதனத்தில் சொரியலாய் 3/4 பங்கு அவரது மனைவியான சின்னராசா கைம்பெண் இராசாத்திக்கும். மிகுதி 1/4 பங்கு மகனான சின்னராசா செந்தமிழ்ச்செல்வனுக்கும் சென்றடைந்தது.

சிவஞானம் கிருஸ்ணபவானும் பெண் வசந்தகுமாரியும் குறித்த ஆதனத்தின் சொரியலாக 3/4 பங்கிற்கு பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1665/01.11.2007ஆம் இலக்க உறுதியால் சின்னராசா கைம்பெண் இராசாத்தி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த சிவஞானம் கிருஸ்ணபவானும், பெண் வசந்தகுமாரியும் குறித்த ஆதனத்தின் சொரியலாக 1/4 பங்கிற்கு பிரசித்த நொத்தாரிசு சரவணமுத்து தவகுணராஜசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 99/16.04.2019ம் இலக்க உறுதியால் குறித்த சின்னராசா செந்தமிழ்ச்செல்வன் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த சிவஞானம் கிருஸ்ணபவானும் பெண் வசந்தகுமாரியும் பிரசித்த நொத்தாரிசு சரவணமுத்து தவகுணராஜசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 114/23.05.2019ம் இலக்க உறுதியில் மேற்படி ஆதனத்தின் முழுப்பங்கும் தங்களுக்கு வந்தடைந்தது என வெளிப்படுத்தி ஒன்றுபடுத்தல் சாசனத்தை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த சிவஞானம் கிருஸ்ணபவானும் பெண் வசந்தகுமாரியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்துமூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவஞானம் கிருஸ்ணபவானும் பெண் வசந்தகுமாரியும் ஆகியவர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்/ செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை. (C-2092)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதத் தொழிலில் ஈடுபடுவோர் தொடர்ந்தும் கைது செய்யப்பட வேண்டும்

## சமாசத் தலைவர்

(அக்கராயன்)

**முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் கைதுகள் தொடர்ந்து இடம்பெற வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்றிக் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 15 நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவு கடலில் சுருக்கு வலை பயன்படுத்துதல், வெளிச்சம் பாய்ச்சி தொழில் செய்தல் உட்பட பல்வேறு சட்டவிரோத தொழில்கள் இடம்பெற்றன.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர், மாவட்டச் செயலாளர் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் என்பவற்றில் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களமும் கடற்படையும் இணைந்து கடந்த 15 நாட்களுக்கு மேலாக சட்டவிரோத தொழிலில் ஈடுபடுகின்றவர்களை கைது செய்து வருகின்றன.

இவை தொடர வேண்டும்.

கைதுகள் நிறுத்தப்பட்டால் சட்டவிரோத தொழில்கள் அதிகரிக்கும் எனவும் சமாசத் தலைவர் தெரிவித்தார். (5-4-350)

# விவசாயக் காணிகள் வழங்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் தென்னியங்குளம் கிராமத்தில் வயல் நிலமற்ற குடும்பங்களுக்கு வயல் நிலம் வழங்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 122 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் 48 குடும்பங்கள் வயல் நிலமற்ற குடும்பங்களாக காணப்படுகின்றனர்.

இக்கிராமம் பல்வேறு அடிப்படை வசதிகளற்ற கிராமமாக காணப்படுகின்றன. பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை. முழுமையாக விவசாயத்தினை நம்பி இக்குடும்பங்கள் வாழ்கின்றன. யானைகளின் தொல்லை எனப் பல்வேறு பிரச்சினைகள் இக்கிராமத்தில் காணப்படுகின்றன. எனவே இக்கிராமத்தில் விவசாயக் காணிகள் அற்றவர்களுக்கு காணிகள் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-350)

# ஊழியருக்குத் தொற்று; தொடர்புடையோர் தனிமைப்படுத்தல்

(பனிக்கன்குளம்)

மல்லாவி வைத்தியசாலை ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான நபர் கிளிநொச்சி கொரோனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த நபருடன் தொடர்புகளைப் பேணியவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதோடு அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. (5-4-281)

# சுகாதார வைத்திய அதிகாரியின் அவசர அறிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பகுதியில் இருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச மக்களுக்கான அவசர அறிவித்தல் ஒன்றை மல்லாவி மற்றும் மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை விடுத்துள்ளது

இதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நாட்டில் கொரோனா தற்சமயம் வேகமாக பரவுகின்றமை யாவரும் அறிந்த விடயம். தற்போது எமது பிரதேசத்திலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே சகல விழாக்கள், நிகழ்வுகள் ஒன்று கூடல்கள், தனியார் வகுப்புகள் மற்றும் சமய ஆராதனைகளை உடனடியாக நிறுத்துவதுடன் சுகாதார நடைமுறைகளை சரியாக கடைப்பிடிக்குமாறும் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வைத்தியசாலையில் பணியாற்றும் கொல்லவிளாங்குளம் பகுதியை சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு கொழும்பில் மேசன் வேலைக்கு சென்று திரும்பிய ஆலங்குளம் பகுதியை சேர்ந்த பொதுமகன் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த அவசர அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (5-4-281)

# உற்பத்திகளை விற்பனை செய்ய வழிகோரும் விவசாயிகள்

(அக்கராயன்)

கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராம விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வழிகளை உருவாக்குங்கள் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் கண்ணகைபுரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேட்டுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற கிராமங்களில் ஒன்றாக கண்ணகைபுரம் காணப்படுகின்றது.

மாவட்டச் செயலாளர் தலைமையில் இக்கிராமத்தில் மேட்டுப் பயிர்ச் செய்கைக்கான கூட்டம் நடத்தப்பட்டே பயிர்ச் செய்கைகள் ஆரம்பிக்கப்படும்.

தற்போது இக்கிராமப்புரத்தில் மரக்கறிகள் உட்பட பெருமளவு உபஉணவு இக்கிராமத்தில் இருந்து ஏற்றுமதி செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

காரணம் போக்குவரத்து வசதியின்மையே. இக்கிராமத்திற்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டால் தமது உற்பத்திப் பொருட்களை கிளிநொச்சி நகரத்திற்கு எடுத்து வந்து விற்பனை செய்யக் கூடிய நிலைமை ஏற்படும்.

ஆனால் கிராமத்திற்கான பேருந்து சேவைகளும் இடம் பெறுவதில்லை. கண்ணகைபுரம் கிராமம் தனிக் கிராம உத்தியோகத்தர் பிரிவைக் கொண்டுள்ளது.

310 வரையான குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்கின்றன.

கிளிநொ ச்சி மாவட்டச் செயலகம் கண்ணகைபுரம் உற்பத்திப் பொருட்களையும் விற்பனை செய்வதற்கான வழியினை ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் கண்ணகைபுரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்ணகைபுரம் மேட்டுப் பயிர்ச் செய்கைக்கு அக்கராயன் குளத்தில் இருந்தே நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. (5-4-350)

வன்னி வலம்



தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி அலுவலகத்தில் மே தின நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டார்.

(படம்:- சப்தசங்கரி, தேவானந்தன்)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஒரு இலட்சம் நிதிப் பங்களிப்பில் முல்லைத்தீவு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உலர் உணவு பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

03.05.2021
சித்திரை 20, திங்கட்கிழமை
சப்தமி முன்னிரவு 7.33 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 1.54 மணிவரை
சுபநேரம் 11.56 - 1.26 மணிவரை
இராகுகாலம் 7.26 - 8.56 மணிவரை
சந்திராஷ்டமம்:- மிருகசீரிடம், திருவாதிரை
சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம். வளவன்

**மேஷம்** - வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ் வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்** - அதிகம் செலவாகுமென நினைத்த காரிய மொன்று நல்ல விதமாக நடைபெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கருத்து முரண்பாடுகள் அக லும்.

**மிதுனம்** - மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும் நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கடகம்** - ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாக நட ந்து பாராட்டுப் பெறும் நாள், போசன நன்மையுண்டு.

**சிம்மம்** - உடல் நலன் சீராகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** - தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சி கள் கைகூடும், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்தழைப்புக் கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** - வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர் கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வரு மானம் வரும் வழியைக் கண்டு கொள்வீ ர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண் ணம் உருவாகும்.

**விருச்சிகம்** - வருமானம் திருப்தி தரும் வகையில் அமை யும், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடை க்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமு ண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**தனுசு** - ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** - தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெற லாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** - சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணத்தால் பலனுண்டு, சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மீனம்** - அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னே ற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

பேராசைக்காரர்களுக்கு கை நீளம்

# இந்தியாவில் இருந்து வருகைதந்தோர் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டனர்

(புத்தளம்)

இந்தியாவில் இருந்து கடல் வழியாக இலங்கை வந்து, புத்தளம் பிரதேசத்தில் வீடொன்றில் தங்கியிருந்த பெண் ஒருவரும் அவரது இரண்டு பிள்ளைகளையும் சுகாதாரத் துறையினர் உடனடியாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இந்தப் பெண்ணுடன் வந்த மற்றுமொரு பெண் தொடர்பான தகவல்கள் இன்னும் தெரிய வரவில்லை.

இதனிடையே இந்தியாவில் இருந்து கடல் வழியாக இலங்கை வரும் நபர்களை தடுக்க கடற்படையினர் விசேட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை இலங்கை மீனவர்கள், கடலில் இந்திய மீனவர்களுடன் நெருங்கிய செயற்படுவதை தவிர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொவிட் வைரஸ் பரவல் வேகமெடுத்துள்ளதன் காரணமாக மக்கள் இந்தியாவின் எல்லை ஊடாக அயல் நாடுகளுக்குத் தப்பிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவுடன் நில எல்லைகளைக் கொண்டுள்ள நாடுகள் தமது எல்லைகளை மூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அதிகளவான தொற்றாளர்கள் கொழும்பில் அடையாளம்

(கொழும்பு)

இலங்கையில் நேற்று முன்தினம் கொவிட் தொற்றுக்குள்ளான ஆயிரத்து 716 பேரில், அதிகமானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர்.

கொவிட் தொற்று தொடர்பான நாளாந்த அறிக்கையை கொவிட்-19 பரவல் கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையம் வெளியிட்டு வருகிறது.

இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தில் 375 பேர் நேற்று முன்தினம் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 247 பேருக்கும் களுத்துறை மாவட்டத்தில் 158 பேருக்கும் காலி மாவட்டத்தில் 138 பேருக்கும் குருணாகல் மாவட்டத்தில் 108 பேருக்கும் கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் தலா 84 பேருக்கும் தொற்றுறுதியாகி உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் 82 பேருக்கும் மாத்தறை மாவட்டத்தில் 70 பேருக்கும் மொனறாகலை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தலா 56 பேருக்கும் தொற்றுறுதியாகி உள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் 45 பேருக்கும் புத்தளம் மாவட்டத்தில் 33 பேருக்கும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 24 பேருக்கும் பொலநறுவை மாவட்டத்தில் 19 பேருக்கும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 15 பேருக்கும் பதுளை மாவட்டத்தில் 12 பேருக்கும் மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்டங்களில் தலா 09 பேருக்கும் தொற்றுறுதியாகி உள்ளது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பேருக்கும் அம்பாறை மாவட்டத்தில் 5 பேருக்கும் கேகாலை மாவட்டத்தில் 4 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 2 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும் கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாகச் செயற்பாட்டு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)



அனைத்து வீட்டுத் தோட்டங்களுக்கும் மஞ்சள் கன்றுகளை வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

# போலி இலக்கத் தகடு சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

கல்முனை - மருதமுனை பகுதியில் போலிவாகன இலக்க தகடுகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது போலி இலக்கத்தகடுகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது விசேட அதிரடிப்படையினரால் சந்தேகத்திற்கிடமான வான் ஒன்று நிறுத்தி சோதனைக்குட்படுத்தப்பட்ட போது, அதிலிருந்து போலி இலக்கத்தகடுகள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் ஏதேனும் குற்றச் செயலில் ஈடுபடுவதற்காக இந்த இலக்கத்தகடுகளை வைத்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

இதே வேளை கார் ஒன்றும் இவ்வாறு சோதனைக்குட்படுத்தப்பட்ட போது அதிலிருந்து , 3 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதோடு , காரில் பயணித்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை, தெஹிவலை மற்றும் கிராண்ட்பாஸ் பகுதிகளைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் பயன்படுத்திய வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உண்மையைச் சொல்கிறேன்

வெற்றிப் பெருமிதத்துடன் மீதியுள்ள ஒன்பது பேரும் தங்கள் கையில் தொட்டியை ஏந்தி வந்தனர்.

அதில் இரண்டடி நீளத்துக்குச் செடி வளர்ந்திருந்தது. அது ஆரோக்கியமாக இருந்தது.

மன்னர் எல்லோருடைய தொட்டிகளையும் பார்த்துக்கொண்டே வந்தார். அவர் இதழ்களுக்கிடையில் புன்முறுவல் ஒன்று நெளிந்தது.

சாந்தனுவிடம் வந்ததும் அவன் காலித் தொட்டியுடன் நிற்பதைக் கண்டவுடன் மன்னர் முகம் மாறியது.


நடுங்கிப் போனான் சாந்தனு. அவனையே உற்றுப் பார்த்த மன்னர் அவனிடம் அதிகாரமாக கேட்டார்.

"உன்னுடைய பெயர் என்ன?"

"என் பெயர் சாந்தனு அரசே! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும்.

நான் ஆறு மாத காலமாக இந்த விதையைச் செடியாக்க எவ்வளவோ பாடுபட்டேன்.

ஆனால், உண்மையிலேயே என்னால் அதைச் செடியாக்க முடியவில்லை. என்னை நம்புங்கள் அரசே!" என்று



மண்டியிட்டுகதறினான்.

மன்னர் கீழே குனிந்து அவனைத் தூக்கி நிறுத்தித் தன் மார்போடு அணைத்துக் கொண்டார்.

"எதிர்கால மன்னனைத் தேர்ந்தெடுக்கவே இப்போட்டிகளை வைத்தேன்.

அதில் வென்றவனாக இந்த சாந்தனுவை அறிவிக்கிறேன். இவன்தான் எதிர் கால மன்னன்!" என்றார்.

(தொடரும்)

# மகாபாரதம்

நாம் விராட நாட்டு மன்னனை முற்றுகையிட்டால் அவனைக் காக்க பாண்டவர்கள் வருவார்கள். கண்டு பிடித்து விடலாம்.

மீண்டும் நிபந்தனைப்படி பன்னிரண்டு காலம் வனவாசம் அனுப்பி விடலாம்" என்றான்.

அப்போது விராடனிடம்கொண்ட பழைய பகையைத் தீர்த்துக் கொள்ள இதுவே தருணம் என எண்ணிய திரிகர்த்த நாட்டு மன்னன் சுசர்மா அவர்கள் உதவிக்கு வந்தான்.

தென்திசைத் தாக்குதல் அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. வட திசைத் தாக்குதலை துரியோதனன் மேற்கொண்டான்.




ஏற்கனவே கீசகனை இழந்து விராட நாடு வலுவிழந்திருக்கும் என துரியோதனன் எண்ணினான்.

முதலில் பசுக் கூட்டத்தை கவர்வது அவன் திட்டம். அப்போது பசுக்களைக் காக்க பாண்டவர்கள் வருவார்கள் என்பது அவன் கணிப்பு.

**போர் தொடங்கியது**

விராடனுக்கு உதவியாக அவனது சகோதரர்கள் சதானிகன், மதிராட்சன் ஆகியோரும் புறப்பட்டனர்.

கங்கர் தாமும் வல்லனும், தாமக்கிரந்தியும் தந்திரிபாலனும் உதவிக்கு வரலாமா? என்றார். மன்னன் அனுமதித்தான். ஆனால் மன்னன் சுசர்மா விராடனை சிறை பிடித்தான்.

விராடன் படை வீரர்கள் சிதறி ஓடினர். அப்போது கங்கர் வல்லனுக்கு சைகை செய்தார். பீமன் உடன் ஆவேசத் துடன் ஒரு மரத்தை வேருடன் பிடுங்கச் சென்றான்.

கங்கர் "இது பச்சை மரம்" என்றார்.(பீமன் தனது இயல்பான போர் முறையைக் காட்டக்கூடாது. சாதாரண வீரனைப் போல் போரிட வேண்டும்.

ஏனெனில் இன்னும் சில தினங்கள் அவர்கள் மறைந்திருக்க வேண்டியிருந்தது). பின் பீமன் வேறு முறையில் போரிட்டு சுசர்மனைத் தோற்கடித்தான்.


விராடன் மீட்கப்பட்டான். திரிகர்த்த நாட்டு மன்னனை கங்கர் மன்னித்து விட்டு விட்டார். ஆனால் நாட்டின் வடக்குப் பக்க நிலை வேறாக இருந்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் இல்லாததால் குறைந்த அளவே தடுப்பூசி பயன்பாட்டில்

(ஜெனிவா)

**வசதி படைத்த நாடுகளுக்குக் கிடைக்கும் அளவிற்கு ஏழை நாடுகளுக்கு கொரோனாத் தடுப்பூசி கிடைப்பதில்லை என டெட்ரோஸ் அதானாம் கவலை தெரிவித்துள்ளார்.**




உலக மக்களைக் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கொரோனா வைரஸ் தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறது. உலகமே கொரோனாவின் பிடியிலிருந்து வெளியே வருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இன்னும் கொரோனா வைரஸ் பரவலில் அமெரிக்கா முதலிடத்திலும் இந்தியா இரண்டாவது இடத்திலும் இருந்து வருகிறது.

கொரோனா வைரஸ் பிடியில் இருந்து மக்களைக் காப்பதற்காக உலகம் முழுவதும் பல்வேறு தடுப்பூசிகளைப் பயன்படுத்தி வருகின்றன. ஆனால், தடுப்பூசிகள் வளர்ந்த நாடுகளுக்கு மட்டுமே அதிகம் கிடைப்பதாகவும், ஏழை நாடுகளுக்கு இன்னும் போதுமான அளவு தடுப்பூசிகள் கிடைக்கவில்லை என உலக சுகாதார நிறு வனம் கவலை தெரிவித்துள்ளது.

போர்த்துக்கல் நாட்டில் காணொலிக் காட்சி மூலம் சுகாதார மாநாடு நடைபெற்றது. இதில் உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குனர் டெட்ரோஸ் அதானாம் கெப்ரேயஸ் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில், "உலக அளவில் 100 கோடிக்கும் அதிகமான தடுப்பூசி டோஸ்கள் இதுவரை போடப்பட்டுள்ளன.

இதில் 82 விழுக்காடு தடுப்பூசிகள் வளர்ந்த நாடுகளில் பயன்படுத்தப்பட்டுள் என. ஆனால் வருவாய் குறைந்த ஏழை நாடுகளில் இதுவரை 0.3 விழுக்காடு மட்டுமே கொரோனா தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது கவலை அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது" எனத் தெரிவித்தார். மேலும், கொரோனா தடுப் பூசிக்கும், கொரோனா வைரஸ் பரவலுக்கும் உள்ள தொடர்பு குறித்து இங்கிலாந்தில் பொது சுகாதார ஆய்வு நடத்தப்பட்டது.

அது தொடர்பாக வெளியிடப்பட்ட ஆய்வு முடிவுகளின் படி, தடுப்பூசி போடாதவர்களுடன் ஒப்பிடுகையில், ஒரு டோஸ் தடுப்பூசி போட்டவர்களின் மூலம் கொரோனா பரவல் அபாயம் 38 முதல் 49 சத வீதம் குறைவதாக தெரிவிக்கப்புட்டுள்ளது. (நி-4-8)

## துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின், விஸ்கொன்சின் மாநிலத்தில் நடந்த துப்பாக்கி சூட்டில் 7 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விஸ்கொன்சின் கிரீன் பேயில் அமைந்துள்ள கேசினோ நிலையமொன்றிலேயே அந்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இந்த துப்பாக்கி சூடு இடம் பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் தெளிவாகக் கூறப்படாத நிலையில், குறித்த நிலையத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவரால் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

இந் நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-320 8388**

**தொற்று :-152 897 579**

**(நேற்றைய நிலவரம்)**

## இரத்த உறைவு மூன்றாவது நபர் கனடாவில் பாதிப்பு

(ரொறொண்டோ)

அஸ்ராஜெனெகா கொவிட் - 19 தடுப்பூசி போட்டுக் கொண்ட பின்னர் அரிதான இரத்த உறைவு சிக்கலால் பாதிக்கப்பட்ட மூன்றாவது நபர் கனடா-கியூபெக் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்த பெண் உடல் நிலை சீராக உள்ளது. உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என சுகாதார அமைச்சு நேற்று முன்தினம்சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-4-8)

## கொரோனா சுனாமியால் திண்டாடும் மக்கள்

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாவது அலையால் கடந்த 22 ஆம் திகதி தொடங்கி 9 நாட்கள் தொடர்ந்து தினமும் 3 இலட்சத்துக்கும் அதிகமானோரை இந்த கொடிய தொற்று இந்தியாவில் தாக்கி வந்தது. மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் 3 இலட்சத்து 92 ஆயிரத்து 488 பேர் கொரோனா பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.

இதனால் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 1 கோடியே 95 இலட்சத்து 57 ஆயிரத்து 457 ஆக உயர்வடைந்து உள்ளது.

கொரோனா பாதிப்பால் நாட்டில் 3 ஆயிரத்து 689 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 2 இலட்சத்து 15 ஆயிரத்து 542 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் இதுவரை போடப்பட்ட கொரோனா தடுப்பூசிகளின் எண்ணிக்கை 15 கோடி 68 இலட்சத்து 16 ஆயிரத்து 031 ஆக உள்ளது என்று தெரிவித்துள்ளது. (நி-4-8)

## இந்தியாவுக்கு உதவியை அதிகரிக்க ஐ.நா.வாக்குறுதி

(ஜெனிவா)

இந்தியாவில் ஏற்பட்டு உள்ள கொரோனா இரண்டாவது அலையை ஒழிக்க, அந்நாட்டுக்கு தேவையான அனைத்து விதமான உதவிகளையும் அதிகரிக்க தயாராக இருப்பதாக, ஐ.நா. பொதுச் செயலர் ஆன்டோனியோ குட்ரரெஸ் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் கூறியதாவது, கொரோனா இரண்டாவது அலை தீவிரமடைந்து உள்ள இந்த சோதனை மிகுந்த காலத்தில், இந்திய மக்களுக்கு ஆதரவாக, ஐ.நா. துணை நிற்கிறது. இந்தியாவுக்கு தேவையான அனைத்து விதமான உதவிகளையும் அதிகரிக்க, ஐ.நா. தயாராக உள்ளது இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதற்கு, இந்தியாவுக்கான ஐ.நா. நிரந்தர பிரதி நிதி, டி.எஸ்.திருமூர்த்தி நன்றி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பொதுச் சபையின் தலைவர் வோல்கன் பாஸ்கிர் கூறுகையில், "அனைத்து நாடுகளுக்கும் தடுப்பூசி அளித்து உதவிய இந்தியாவில், தற்போது தொற்றுப் பரவல் அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது. இந்த நேரத்தில், அனைத்து நாடுகளும், இந்தியாவுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும்," என்றார்.(நி-4-8)

## ஒட்சிசன் இறக்குமதி தனிநபர்களுக்கு மத்திய அரசு அனுமதி

(டில்லி)

கொரோனா வைரஸ் பரவல் இரண்டாவது அலை மிகத் தீவிரமாக உள்ளது. ஒக்சிசன் செறிவூட்டிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது.இவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு, மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இது குறித்து மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் ஒக்சிசன் செறிவூட்டிகளை, தனிநபர் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கும் வகையில், அந்நிய வர்த்தக கொள்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்சிசன் செறிவூட்டிகளை, "பரிசு" என்ற அடிப்படையில், வெளிநாட்டில் இருந்து வாங்கி கொள்ளலாம். தபால், கொரியர், மின்னணு வர்த்தக இணையதளங்கள் வாயிலாக வாங்கி கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணத்தின் உள்நுழையும் வெளியேறும் இடங்களில் விசேட சோதனை

(கொழும்பு)

பொலிஸாருடன் இணைந்து முத்தரப்பு படையினரும் மேல் மாகாணத்தின் 12 முக்கிய நுழைவு / வெளியேறும் இடங்களில் சிறப்பு நடவடிக்கைகளை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

இதன்போது ஆயிரத்து 102 நபர்களுடன் 526 வாகனங்களை அதிகாரிகள் சோதனை செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 250 நபர்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதில் அலட்சியப் போக்குடன் செயற்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

# 2 பொலிஸாருக்கு தொற்று 37பேர் தனிமைப்படுத்தலில்

(கண்டி)


கண்டி, குண்டசாலையில் உள்ள பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரண்டு பொலிஸார் கொரோனாத் தொற்றுக்குள்ளானது உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து 37பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஒருவர் குறித்த பொலிஸ் பயிற்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மேலும் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளானதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பயிற்சி நிலையத்தில் பொலிஸ் கடமையில் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் குறித்த நிலையத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து குறித்த பயிற்சி நிலையம் மூடப்பட்டு குருநாகலுக்கு பயிற்சியாளர்கள் மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (நி-4)

# வான்- முச்சக்கரவண்டி மோதல் ஒரே குடும்பத்தினர் மூவர் காயம்



(ஹற்றன்)

நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் நேற்று முன்தினம் கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாக திம்புள்ள, பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த ஒரே குடும்பத்தில் தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோரே இவ்வாறு காயமடைந்து சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற வான் ஒன்று, கொட்டகலை பகுதியிலிருந்து கொமர்ஷல் பகுதியை நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியுடன் பின்புறத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# மீண்டும் ஆரம்பிக்கும் ரயில் சேவைகள்

(கொழும்பு)

இரத்து செய்யப்பட்ட ரயில் சேவைகள் சிலவற்றை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பயணிகளின் பலத்த வேண்டுகோளின் பேரில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி தினமும் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கும் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்குமான சேவைகளும்,

(தினமும் 2 ரயில்கள்)

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்கும் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டைக்குமான ரயில் சேவையும்

அத்துடன் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் கொழும்பு கோட்டையிலிருந்து கண்டிக்கும் கண்டியிலிருந்து கொழும்பு கோட்டைக்குமான ரயில் சேவைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2302


### ராஜா

எத்தனை முறை ஏமாற்றப்பட்டாலும் ஒருபோதும் அடுத்தவரை ஏமாற்றக் கற்றுக் கொள்ளாதே... அவரவர் பலனை அவரவர் அனுபவிப்பர். நேர்மைக்கு என்றுமே மரணமில்லை



### சிவா

அறிவை முதலீடாக வைத்தால் அரண்மனையைக் கூட வாங்கலாம். ஆசையை முதலீடாக வைத்தால் துன்பத்தைத்தான் வாங்க முடியும்




### கர்ணன்

நீ வலிமையாக இருக்க வேண்டுமென்றால் துன்பங்களை தனியாக எதிர்கொள்ளக் கற்றுக்கொள்



### அஜய்

என்ன நடக்கும் ஏது நடக்கும் என்று யோசித்துக் கொண்டிருப்பதைவிட முயற்சித்துப் பார்...! கிடைத்து விட்டால் வெற்றி... இல்லையேல் அனுபவம். இரண்டுமே தேவைதான் வாழ்க்கையில்



### மூர்த்தி

சாமி! ஒரு ஆளுக்கு செய்வினை வச்சு நடமாட முடியாத மாதிரி ஆக்கனும் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை சாமி!

ஆளோட பெயரைச் சொல்லுப்பா!

கொரோனா



### யோகேஸ்

அன்று குடிநீர் விற்பனைக்கு வந்தபோது விளையாட்டாக நினைத்தோம். இன்று காற்றும் விற்பனையாகத் தொடங்கி விட்டது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸ் இல்லாததால் வீட்டில் இறக்கும் நிலை

(கொழும்பு)

**மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல அம்புலன்ஸ்கள் இல்லாததால் சில நோயாளிகள் வீட்டிலேயே இறந்து விடுகின்றார்கள் என்றும் நிலைமையை ஓரளவிற்கு கட்டுப்படுத்த நாடு உடனடியாக பூட்டப்பட வேண்டும் என்றும் பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.**

சீரற்ற பி.சி.ஆர். சோதனைகளை நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



ஆய்வகங்களின் திறன் மீறப்பட்டு வருகிறது. இது மிகவும் கடுமையான காலம் என்றும் எச்சரித்தார். இதுவரை எடுக்கப்பட்ட சீரற்ற பி.சி.ஆர். சோதனைகளில் 15% நோய்த்தொற்றுக்கள் அடையாளம் காண்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனைகளில் இடம் இல்லை என்றும் நோயாளிகள் ஐந்து அல்லது ஆறு நாட்கள் வீட்டில் தங்குவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# விமான நிலையத்தில் கைமாறிய 26 கிலோ கிராம் தங்கம்

(கொழும்பு)

டோஹா, கட்டாரிலிருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 32 கோடி ரூபா பெறுமதியான 26 கிலோ தங்க பிஸ்கட்டுகள், நகைகளுடன் இருவரைக் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் பிரதி சுங்கப்பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்தார்.

விமான நிலையத்தின் பராமரிப்பு ஊழியர் ஒருவரும் பயணி ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மிக நீண்ட நாட்கள் சுங்கப் பிரிவினர் முன்னெடுத்த விசேட கண்காணிப்பு நடவடிக்கை ஒன்றின் பலனாக இக்கைது நடவடிக்கை சாத்தியமானதாகவும் இது இலங்கையில் சுங்கப் பிரிவின் வரலாற்றில் ஒரே தடவையில் கைப்பற்றப்பட்ட அதி கூடிய நிறை கொண்ட தங்கம் இது வெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட 26 கிலோ தங்கத்தில், தங்க பிஸ்கட்டுக்களும் தங்க நகைகளும் அடங்குவதாக குறிப்பிட்ட சுங்க ஊடகப் பேச்சாளர் சுதத்த சில்வா, விமான நிலைய பராமரிப்பு ஊழியர் தங்கத்தை உடலில் மறைத்து விமான நிலைய வளாகத்துக்கு வெளியே எடுத்து செல்ல எத்தணிக்கும்போது கைது செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

டோஹா, கட்டாரிலிருந்து வந்த பயணி, விமான நிலைய கழிவறையில் வைத்து விமான நிலைய பராமரிப்பு ஊழியரிடம் தங்கத்தை கொடுத்துள்ளார்.

அவர் அதனை உடலில் மறைத்துக்கொண்டு வெளியேறும் போதே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பின்னர் தங்கத்தை கொடுத்த பயணியையும் சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (நி-4)

# சீனாவின் தடுப்பூசிகளைப் பயன்படுத்த அனுமதிக்காக காத்திருக்கும் இலங்கை

(கொழும்பு)

சீனாவில் உற்பத்தி செய்யப்படும் சினோபார்ம் தடுப்பூசிகளை நாட்டில் பயன்படுத்துவதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளை விரைவுப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தொற்று நோய் தடுப்பு பிரிவின் பிரதான வைத்திய அதிகாரி விசேட வைத்தியர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்தார்.

சீனாவினால் அன்பளிப்பு செய்யப்பட்ட 6 இலட்சம் தடுப்பூசிகள் இலங்கையிடம் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய அந்த தடுப்பூசிகளை 3 இலட்சம் பேருக்கு செலுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் குறித்த தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பின் அனுமதி கிடைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவின் பூனேயில் சீரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளின் இரண்டாம் கட்ட செலுத்துகை அண்மையில் ஆரம்பமானது. எவ்வாறாயினும் முதல் தடுப்பூசிகளை செலுத்திக் கொண்ட அனைவரையும் உள்ளடக்கும் வகையில் சுகாதார தரப்பிடம் தடுப்பூசிகள் இல்லை.

இந்தியாவில் வேகமாகப் பரவிவரும் கொரோனா பரவல் காரணமாக இலங்கை உள்ளிட்ட நாடுகள் பலவற்றுக்கு தடுப்பூசிகளை விநியோகிக்கும் பணிகள் சவாலாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இல்லறமா? துறவறமா?

மனிதர்களில் இல்லற வாழ்வு நடத்துபவர்கள் உண்டு. துறவற வாழ்வு நடத்துபவர்களும் உண்டு. இந்த இரண்டு பேரில் யார் சிறந்தவர்கள்? இல்லறத்தவரா? துறவியா?

இந்த சந்தேகம் ஒரு ராஜாவுக்கு வந்தது. ஒரு நாள் ஒரு துறவி அரண்மனைக்கு வந்தார். அவரிடமே இந்தக் கேள்வியைக் கேட்டார். துறவி சொன்ன பதில் என்ன தெரியுமா?

அவரவர் இடத்திலே அவரவர் சிறப்பாக இருக்கலாம் என்றார்.

பதில் புரியவில்லையே என்றார் ராஜா. என்னுடன் வா புரிய வைக்கின்றேன் என்றார் துறவி. ராஜாவை அழைத்துக் கொண்டு இன்னொரு தேசத்துக்குப் போனார். அங்கே அரண்மனையில் ஒரு சுயம்வரம் நடந்து கொண்டிருக்கு. அரச குமாரர்கள் பல பேர் அங்கே வந்து நிற்கின்றார்கள். வேடிக்கை பார்க்கின்ற கூட்டம் வேறு. இவர்கள் இரண்டு பேரும் கூட்டத்தோடு கூட்டமாக போய் நின்றார்கள். இவர்கள் பக்கத்தில் ஒரு இளம் சந்நியாசி நின்றார். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தார்.

அரசகுமாரி கையில் மாலையுடன் வருகின்றார். அரச குமாரர்கள் யாரையும் பிடிக்கவில்லை. நேராக வந்து இந்த இளம் சந்நியாசி கழுத்தில் மாலையைப் போட்டுவிடுகின்றார். உடனே அவர் என்ன இது. நான் சந்நியாசி, எனக்குத் திருமணமா? என்று சொல்லி மாலையைக் கழற்றித் தூக்கி எறிந்து விட்டார்.

அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். என் பெண்ணின் அழகைப் பாருங்கள். இப்பொழுதே பாதி இராச்சியம் உங்களுக்குத் தருகின்றேன். எனக்குப் பிறகு முழு இராச்சியமும் உங்களுக்குத் தான் என்றான் அந்த நாட்டு அரசன்.

அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். என்னை விட்டுவிடுங்கள் என்று சொல்லி அந்த இளம் சந்நியாசி அங்கேயிருந்து ஓட ஆரம்பித்தார். அரசகுமாரியும் பின்னாடி வர... அவர் பின்னாடியே எங்கள் ராஜாவும் துறவியும் ஓடி வந்தார்கள். இளம் சந்நியாசி எங்கேயோ ஓடிப்போய் மறைந்துவிட்டார்.

அரசகுமாரி ஒன்றும் புரியாமல் ஒரு மரத்தடியில் அழுது கொண்டு இருந்தார். இருட்டிப் போய்விட்டது ராஜாவும் துறவியும் பார்த்தார்கள். அம்மா. கவலைப்படாதே! நாளை காலைப் பொழுது விடியட்டும் உன்னை உன்னுடைய அரண்மனையிலேயே கொண்டு வந்து விட்டுவிடுகின்றோம் என்றார்கள்.

மரத்தடியிலே இவர்கள் மூன்று பேரும் ஒதுங்கி இருப்பதை அந்த மரத்திலே இருந்த இரண்டு புறாக்களும் அதன் மூன்று குஞ்சுகளும் பார்த்தன. வந்தவர்களுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டாமா? என்று சொல்லி ஆண் புறா பறந்து போய் எங்கிருந்தோ சுள்ளிகளையும் நெருப்பையும் கொண்டு அருகில் வந்து மரத்தடியில் போட்டது.

ஐந்து புறாக்களும் அவர்கள் முன்னால் வந்து நின்று எங்களை நீங்கள் சாப்பிடுங்கள். உங்கள் பசியைப் போக்குங்கள் என்றது.

இப்போது அந்தத் துறவி ராஜாவிடம் சொன்னார்.தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது பிறருக்கு உதவி செய்கின்ற இல்லறத்தான் சிறந்தவன் என்பதற்கு இந்தப் புறாக்கள் உதாரணம். துறவி என்றால் எதையும் உதறித் தள்ளுவான் என்பதற்கு அந்த இளம் சந்நியாசி உதாரணம். அதனால் அவர்களுடைய இடத்திலே அவர்கள் சிறப்பாக இருக்கலாம் என்றார்.

சுவாமி விவேகானந்தர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கின்றார். அதனால் இல்லறமா துறவறமா என்பது முக்கியமில்லை. இல்லறத்திலே இருந்து கொண்டு துறவறத்தை நினைக்கக் கூடாது. துறவறத்திலே இருந்து கொண்டு இல்லற தர்மத்தைக் கடைப்பிடிக்கப் போகின்றேன் என்று சொல்லிக் கொண்டும் இருக்கக் கூடாது.

எங்களுடைய ஊர் பெரிதா? உங்களுடைய ஊர் பெரிதா? என்று கேட்டால் எனக்கு எங்களுடைய ஊர் தான் பெரிது. உனக்கு உங்களுடைய ஊர் பெரிது என்று சொல்லுவோமே அதுமாதிரித் தான் இதுவும்.

சில சுயம்பரங்களிலே சந்நியாசி ஓடியது மாதிரி இளவரசர்களே ஓடுவதுண்டு. ஒரு ராஜா தன் பெண்ணிற்கு சுயம்வரம் நடத்தினார். பல நாட்டு அரச குமாரர்கள் வந்து சேர்ந்தார்கள். சுயம்வரம் நடைபெறுகின்ற நாள்.

அரண்மனைக்குள்ளே இருந்து அரச குமாரர்கள் எல்லாம் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்து கொண்டிருந்தார்கள். ஒரு பெரியவர் இதைப் பார்த்துவிட்டு அமை ச்சரை கூப்பிட்டுக்கேட்டார்.

அந்நிய தேசத்து இளவரசர்கள் எல்லாம் நமது இளவரசியை கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் தானே வந்தார்கள். ஏன் இப்படி ஓடுகின்றார்கள்? நம் இளவரசியை அவர்கள் பார்க்கவில்லையா? என்றார்.

பார்த்த பின்பு தான் இப்படி ஓடுகின்றார்கள் என்றார் அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 29 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

இக் காலத்தில் நல்லூரில் அமைந்துள்ள மாநகரசபை அலுவலகத்தில் இடவசதி போதாமையால் கல்யாண மண்டபத்தில் தொழிற்பட்ட நூலகத்தின் மேலும் ஒரு பகுதி நாவலர் கலாச்சார மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

நூலகத்தின் முதலாவது கிளையான சுண்டுக்குளிக்கிளை, றக்கா வீதியிலமைந்த சனசமூகநிலையத்தில் 1981 இலிருந்து இயங்கி வந்தது. சுண்டுக்குளி கிளை நூலகத்தின் அபிவிருத்தியையும் பயன்படுத்துவோரின் அளவு மற்றும் அதிகரிப்பையும் கருத்திற் கொண்டு நூலகக் குழுவின் முக்கிய உறுப்பினரான பேராசிரியர் கு.நேசையாவின் பெரு முயற்சியால் யாழ். வை.எம்.சீ.ஏ. நிறுவனக் கட்டடத்தில் ஏற்கெனவே அங்கிருந்த நூலகத்தையும் இணைத்து இக் கிளைநூலகத்தை நடத்த வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தாரின் ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி 23.03.1985ஆம் திகதி சுண்டுக்குளி கிளை நூலகம் வை.எம்.சீ.ஏ. கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. வை.எம்.சீ.ஏ.நூலகத்தினையும் அதன் பொறுப்பாளரையும் மாநகரசபை ஏற்றுக் கொண்டது. இந்நூலகம் ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம்,வரலாறு ஆகிய துறைகளை விசேடமாகக் கொண்ட நூலகமாக தொழிற்பட ஆவன செய்யப்பட்டது. இருந்தும் பின்னர் அங்கு சகல விடய நூல்களும் வைக்கப்பட்டன.

### சுண்டிக்குளி கிளை நூலக திறப்பு விழாவில் யாழ். மாநகர ஆணையாளர் உரை

மக்களுக்கு அண்மையில் நூலகங்களை கொண்டு செல்வது சிறந்தது. மக்கள் நூலகங்களைத் தேடிச் செல்லும் நிலை தற்போது அருகி வருகின்றது. இன்றைய சூழ்நிலையும் பாதுகாப்பின்மையும் இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது. தற்போது பொதுநூலகம் அமைந்துள்ள இடமும் பாதுகாப்பற்றது என்ற உணர்வையே ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே மக்களிடம் நூலகத்தை கொண்டு செல்ல வேண்டும் என்று திட்டமிட்டோம்.

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் யாழ். பொது நூலகத்தின் சுண்டிக்குளிக் கிளை நூலகத்தை யாழ். வை. எம். சி. ஏ கட்டடத்தில் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இத் திறப்பு விழாவில், யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் சீ.ஈ. ஆனந்தராஜன், சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர். அங்கு மாநகர ஆணையாளர் சிவஞானம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

பொது நூலகம் கல்விச்சாலை போன்றது. மாணவர்களும் வாசகர்களும் அமைதியோடும் மன ஆறுதலுடனும் படிக்கக் கூடிய சூழ்நிலையில் பொது நூலகங்கள் அமைந்திருக்க வேண்டும். தற்போது பொது நூலகத்திலிருந்து மன அமைதியோடு படிக்கக் கூடிய சூழ்நிலையில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டே கல்லூரிகளுக்கு அண்மித்தும் மாணவர்கள் வாசகர்களை மையமாகக் கொண்டும் இந் நூலகத்தின் கிளைகளை நிறுவ முடிவு செய்தோம்.

தமிழ் மக்களின் பிரதான சொத்துக்கள் கல்வி, அறிவு, ஆற்றல் ஆகியனவாகும். இதனை தமிழ் மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும். எமது முன்னோர் கல்வித் திறமைகளினாலேயே முன்னேற்றம் பெற்று உலகப் புகழ்பெற்று விளங்கினர். இதனாலேயே தமிழினம் மீது பிறர் பொறாமைப்படும் நிலை தோன்றியது என்றார்.பேராசிரியர் கு. நேசையா பெறுமதிமிக்க நூல்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.யாழ். வை. எம். சி. ஏ.தலைவர் எம். சி. பிரான்சிஸ். சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் சீ.ஈ. ஆனந்தராஜன், சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், யாழ். மாநகர பொது நூலகப் பிரதம நூலகர் ஆகியோரும் உரையாற்றினார்கள். இந் நூலகம் பின்னர் சுமார் 15,000 நூல்களை உள்ளடக்கியதாகவும் ஆயிரக்கணக்கான வாசகர்களையும் கொண்டதாகவும் தொழிற்பட்டு வந்தது.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்களின் மாபெரும் இடம் பெயர்வால் கைவிடப்பட்ட இந்நூலகம் பாரிய சேதத்திற்குள்ளானது. மீள் குடியேற்றறம் ஏற்பட்ட பின்னர் இந்நூலகத்தை மீள் நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் 1998 ஆம் ஆண்டு யாழ். பொதுசன நூலகம் புனர் நிர்மாணம் செய்யும் திட்டத்தின் கீழ், சுண்டிக்குளியில் அமைந்திருந்த யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடத்தில் இடைக்கால நூலகம் ஆரம்பிக்கப்பட்டதால், இந் நூலகம் நிரந்தரமாக மூடப்பட்டது. புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகம் மக்கள் பாவனைக்கு வந்த பின்னர் சுண்டிக்குளி கிளை நூலகத்தின் தேவையும் அவசியமற்றதாகிவிட்டது.

### யாழ். மூர் வீதி நூலகக் கிளை

இன்னும் ஒரு கிளை நூலகமான மூர்வீதி கிளை நூலகம், யாழ். மாநகர சபை முஸ்லிம் வட்டாரத்தில் தனியார்கட்டடத்தில் 23.03.1985 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்நூலகத்தின் தேவை அதிகரிக்கப்படவே, அப்பிரதேசத்தின் மாணவர்களின் தேவை கருதி நல்லதொரு நூலகத்தை உருவாக்கவேண்டியிருந்தது. இந்நூலகத்துக்கென ஒரு கட்டடம் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ஜனாப் அப்துல் காதரின் பெரு முயற்சியால் குறைந்த விலையில் ஒஸ்மானிய கல்லூரி வீதியில் கொள்வனவு செய்யப்பட்டது. அக்கட்டடத்தில் நூலக சேவைகள் அனைத்தும் உள்ளடக்கிய நூலகம் ஒன்று 16.07.1986இல் ஆரம்பிக்கப்பட்டது.இதே நேரம் 1990 ஒக்டோபரில் முஸ்லிம் மக்களின் இடம் பெயர்வோடு மூடப்பட்ட இந் நூலகம் மூர் வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டு 1995 ஆம் ஆண்டு வரை இயங்கியது. அதன்பின் அது மூடப்பட்டு விட்டது.


### யாழ். குருநகர் நூலகக் கிளை



குருநகர் நூலகக் கிளை



பழைய கட்டடம்




திறப்பு விழா நினைவுக்கல்



குருநகர் நூலகம் திருத்தியமைக்கப்பட்ட கட்டடம்

இதேவேளையில் நூலக சேவையின் விஸ்தரிப்பு வேலைகள் மேலும் தொடர்ந்தன. யாழ். குருநகர் பிரதேச மக்களின் கல்விச் சேவையைக் கருத்திற் கொண்டு குருநகர் கடற்கரை வீதியில் ஒரு புதிய நூலகக் கட்டடம் கட்டப்பெற்று, 28.09.1986 இல் யாழ். ஆயர். அதி வண.ஆண்டகை வ.தியோகுப்பிள்ளையால் திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில், இந்த நூலகத்தில் பல்வேறு விடயங்களில் 10,000 புத்தகங்கள் இருந்தன. இந்நூலகம் உசாத்துணைப் பிரிவு, இரவல் வழங்கும் பிரிவு மற்றும் சிறுவர்கள் பிரிவு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. தற்போது இந்நூலகத்தில் 18,000 நூல்கள் வரையில் உள்ளன. இக்கட்டடம் 2018-2020 காலப்பகுதியில் திருத்தியமைக்கப்பட்டது.

### நல்லூரில் அமைந்துள்ள தமிழ் இந்து கலாச்சார நூலகம்

தமிழ் இலக்கியம், மொழி, கலாச்சாரம், பண்பாடு சம்பந்தமான நூல்கள் எல்லாம் தனியாகச் சேகரித்துப் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கல்விமான்களின் வேண்டுகோளிற்கிணங்க, ஒரு சிறப்பு நூலகத்தை ஆரம்பிக்க யாழ். மாநகரசபை இணங்கியது. இதன் பிரகாரம், நல்லூரில் அமைந்திருந்த சைவப் பெரியார் ஆறுமுக நாவலரின் ஞாபகார்த்த மண்டபத்தில் ஒரு கலாச்சார நூலகம் 09.06.1986 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது ஒரு கலாச்சார நூலகமாகவும் சிறப்பு நூலகமாகவும் தனியே உசாத்துணை நூலகமாகவும் தொழிற்பட்டு வருகின்றது. எமது கலை, கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கக் கூடிய ஆய்வு நூல்கள் இங்கு சேகரித்துப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது அலை மோசமாக உள்ளது

## ஆனாலும் சமூகப்பரவலாக மாறவில்லை

### விசேட மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இலங்கையில் கொரோனா வைரஸ் இதுவரை சமூகப் பரவலாகவில்லை என இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் தற்போது மூன்றாவது கட்டம் மிக உயர்ந்த ஆபத்தில் உள்ளது என்றும் சமூகப்பரவல் ஆபத்து நான்காவது கட்டத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தொற்று நோயியல் பிரிவின் தகவல்களின் படி,

நாட்டில் பதிவான பாதிப்புகளின் எண்ணிக்கையால் தொற்றுநோய் தற்போது நாட்டின் மூன்றாவது அலை மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த நாட்டில் கொரோனா வைரஸ் சமூகப்பரவலாக்கப்படவில்லை என்பது தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



### விரதங்கள்

## முக்தி தரும் வைகுண்ட ஏகாதசி

(தொடர்ச்சி)



ஓம் கேசவாயநம, ஓம் நாராயணாயநம, ஓம் மாதவாயநம, ஓம் கோவிந்தாயநம, ஓம் விஷ்ணுவேநம, ஓம் மதுசூதனாயநம, ஓம் த்ரிவிக்ரமாயநம, ஓம் வாமனாயநம, ஓம் புருஷோத்தமாயநம, ஓம் ஸ்ரீதாராய நம, ஓம் அதோஷஜாயநம, ஓம் ஹ்ருஷீகேசாய நம, ஓம் நரசிம்ஹாயநம, ஓம் பத்மனாபாயநம, ஓம் அச்யுதாயநம, ஓம் தாமோதராயநம, ஓம் ஜனார்த்தனாயநம, ஓம் ஸ்ங்கர்ஷணாய நம, ஓம் உபேந்த்ராயநம, ஓம் வாஸூதேவாயநம, ஓம் ஹரியேநம, ஓம் ப்ரதும்ம்னாயநம, ஓம் க்ருஷ்ணாயநம என்பது போன்ற எளிய நாமங்களைக் கூறி வழிபடலாம்.

**ஸ்ரீ மஹாவிஷ்ணு காயத்ரி**

ஓம் நாராயணாய வித்மஹே
வாசு தேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு; ப்ரசோதயாத்

## விரத பலன்கள்

அம்பரிஷ மன்னன் விஷ்ணுவில் பக்தன் அவன் ஒரு வருடம் முழுவதுமாக ஏகாதசி விரதம் இருந்து விஷ்ணுவின் அருளைப் பெற்றான். ஒருமுறை அவன் ஏகாதசி விரதம் இருந்து அதை முடிக்கும் வேளையில் துர்வாச முனிவர் அங்கு வந்தார்.

மன்னன் அவரை வரவேற்று உணவு உண்ண வரும்படி அழைத்தான். முனிவரும் சம்மதித்து ஆற்றில் நீராடி விட்டு வருவதாகக் கூறிச் சென்றார். வெகு நேரமாகியும் முனிவர் வரவில்லை. விரதம் முடிவதற்குள் மன்னன் சாப்பிடவில்லை என்றால் விரத பங்கம் ஏற்பட்டு விடும். இதனால் மன்னன் துளசி தீர்த்தத்தை அருந்தி உபவாசத்தை முடித்துக்கொண்டான்.

இதை அறிந்த துர்வாச முனிவர் கடும் கோபம் கொண்டார். தனது சிகையில் இருந்து ஒரு முடியைப் பிடுங்கி அதை அம்பரிசனை கொல்வதற்கு ஏவினார். அது பூதமாக மாறி மன்னரைத் துரத்தியது. மன்னன் விஷ்ணுவைப் பிரார்த்தனை செய்தான். உடனே விஷ்ணுவின் சக்கராயுதம் துர்வாசரைத் துரத்தியது.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர் மும்மூர்த்திகளிடம் சரண் அடைந்தார். அவர்கள் "நாங்கள் பக்தர்களுக்கு அடிமை. எங்கள் இதயம் பக்தர்கள் வசம் உள்ளது. எனவே நீ அம்பரிசனிடமே போய் மன்னிப்புக் கேள்" என்று கூறினார். முடிவில் துர்வாசர் மன்னனிடமே சென்று மன்னிப்புக் கேட்டார். மன்னனும் சக்கரத்தாழ்வாரை பூஜித்து துர்வாச முனிவரைக் காப்பாற்றினார். துர்வாசர் மன்னனுக்கு நன்றி கூறி ஆசி வழங்கினார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட பொதி

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் பிரிவு அறைக்கு வீசப்பட்ட பொதி ஒன்றிலிருந்து கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வனாத்தமுல்ல பகுதியிலிருந்து மகளிர் பிரிவின் கூரைக்கு மேலாக பொதி ஒன்று வீசப்பட்டுள்ளது.

அந்தப் பொதியிலிருந்து 6 கையடக்கத் தொலைபேசிகள், 8 மின்கலங்கள், 5 மின்னேற்றி, 4 சிம் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ்துறை தெரிவித்துள்ளது. (நி-4)

## சுகாதார விதிமுறை மீறலில் மேலும் 187 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் 187 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 4 ஆயிரத்து 642 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## மேலும் 7 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கப்பட்டன

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று காரணமாக திருகோணமலை, கொழும்பு உட்பட 4 மாவட்டங்களில் 7 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நேற்றுக் காலை 6 மணி முதல் அமுலாகும் வகையில் முடக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 150 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 140 |
| தக்காளி | 120 | 80 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 180 | 140 | 240 |
| பூசணி | 40 | 60 | 50 | 60 |
| புடோல் | 100 | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 220 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 130 | 140 | 140 |
| பயற்றங்காய் | 100 | 120 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 100 | 80 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 600 |
| போஞ்சி | 140 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 60 | 40 | 80 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 180 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | — | 200 | 280 |
| முள்ளங்கி | 80 | 40 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கடத்தல் முறியடிப்பு
# கடத்தல்காரர்கள் தப்பியோட்டம்



(நெளுக்குளம்)
வவுனியா புளியங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நைனாமடு பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மரக்கடத்தல் நடவடிக்கை பொலிஸாரால் முறியடிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் மரக் கடத்தல் நடவடிக்கை இடம் பெறுவதாக புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று அதிகாலை அங்கு சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது கருங்கற்களினால் மறைக்கப்பட்ட நிலையில் முதிரை குற்றிகளை கடத்திச்செல்ல முற்பட்டமை தெரியவந்தது.

மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் தப்பிச்சென்றுள்ள நிலையில், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 2 வாகனங்களையும், 43 முதிரைக் குற்றிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)

# மணல் அகழ்வை கண்காணிக்கும் கமக்கார அமைப்பு

(அக்கராயன்)
கிளிநொச்சி பூநகரி குடமுருட்டி ஆற்றுப்படுகையில் பூநகரியினைச் சேர்ந்த எவரும் மணல் அகழ்வில் ஈடுபடுவதில்லை என பூநகரி பிரதேச செயலாளர் ச.கிருஸ்ணேந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆனால் பூநகரியினைச் சேர்ந்த எவரும் மணல் அகழ்வில் ஈடுபடுவதில்லை என்ற விபரம் சேகரிக்கப்பட்டுள்ளது. குடமுருட்டிக் கமக்கார அமைப்பு கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. ஆனால் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துமாறு கிளிநொச்சியில் உள்ள பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை குடமுருட்டி ஆற்றுப்படுகையில் மணல் அகழ்வு இடம் பெற்று பரந்தன் பூநகரி வழியாக தொடர்ச்சியாக மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுமானால் குடமுருட்டி வயல் நிலங்களுக்குள் பூநகரி கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்படும் எனவும் குடமுருட்டிக் குளத்தின் வான்பகுதியிலும் மணல் அகழ்வு நடை பெறுகின்றது எனவும் தெரிவித்தார். (5-4-350)

# சட்டவிரோத மணல் அகழ்வு



(பொற்பதி)
வெற்றிலைக்கேணியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவது, வெற்றிலைக்கேணி புல்லாவெளி வீதியில் உள்ள மூர்த்தி ஐயர் தோட்டப் பகுதியிலும் அதற்கு அருகில் உள்ள ஒரு குளப்பகுதியிலும் இந்த சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம் பெறுவதாக தெரிவிக்கின்றனர். இந்த நடவடிக்கைகள் அண்மை நாட்களாக இரவு பகலாக இடம்பெற்று வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (5-4-64)




உழைக்கும் மக்கள் அதிகாரத்தை நோக்கி அணி திரள்வோம்" எனும் தொனிப்பொருளில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சியின் மேதினக்கூட்டம் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்:சதீஷ்)



முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரரை விடுதலை செய்யுமாறு கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக்காலை வவுனியா புதிய சாளம்பைக்குளம் பள்ளிவாசலுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.(படம்: சதீஷ்)




அரியாலை ஞானதீபம் அமைதிகள் இளையோர் திறன் விருத்தி மையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையுடன் இரத்ததான முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நெடுங்குளம் திறன் விருத்தி மைய அலுவலகத்தில் இடம்பெற்றது. மேற்படி மையத்தின் இயக்குநர் அருட்பணி யூட் ஹறோவ் தலைமையில் இவ் இரத்ததான முகாம் நடைபெற்றது. (படம்-ரவிசாந்)

# கொவிஷீல்ட் மருந்து
# வெளிநாடுகளில் உற்பத்தி
## ஷீரம் நிறுவனத்தின் அதிரடி தகவல்

(டில்லி)
இந்தியாவில் தற்போது பயன்பாட்டில் உள்ள கொவிஷீல்ட் மருந்தை வெளிநாடுகளில் தயாரிக்க ஷீரம் நிறுவனம் ஏற்பாடு செய்து வருகிறது.

இந்தியாவில் தற்போது பயன்பாட்டில் உள்ள கொவிஷீல்ட் கோவக்சின் தடுப்பூசிகளில் கொவிஷீல்ட் மருந்தை புனேவில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவனம் தயாரித்து வருகிறது. இதன் அதிபர் ஆதர்பூனவல்லா லண்டனில் நிருபர்களிடம் கூறியதாவது:-

புனேவில் உள்ள எங்கள் நிறுவனத்தில் ஆண்டுக்கு 250 கோடி டோஸ் மருந்து தயாரிக்க முடியும். இதை இன்னும் 6 மாதத்தில் 300 கோடியாக உயர்த்த திட்டமிட்டுள்ளோம்.

அதுமட்டுமல்ல கொவிஷீல்ட் மருந்தை வெளிநாடுகளில் உள்ள எங்கள் கூட்டணி நிறுவனங்களிலும் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறோம்.

இதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என அவர் தெரிவித்தார். (நி-4)

# சாரதியின் மீது வாள்வெட்டு சந்தேகத்தில் ஒருவர் கைது

(குருமன்காடு)
வவுனியா யாழ் வீதியில் பயணித்த டிப்பரை வழி மறித்து அதன் சாரதி மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்தி விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா திருநாவற்குளம் பகுதியில் இருந்து ஏ-9 வீதி வழியாக நகரை நோக்கிச் சென்ற டிப்பர் வாகனத்தை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த நபர்கள் யாழ் வீதி சோயா லேன் பகுதியில் பயணித்த டிப்பரை வழிமறித்து அதன் சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பித்து சென்றதுடன் குறித்த வாள்வெட்டுத் தாக்குதலில் டிப்பர் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதல் மேற்கொண்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் அப்பகுதியை சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன், அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியை கொல்லக் கூடாது. அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்!

– சாமுவேல் காலரிட்ஜ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறுபதில் போகும் பதவி ஐம்பத்தைந்தில் போனால் என்ன?

உயர்பதவிகளில் இருக்கக்கூடிய அதிகாரிகள் தற்துணிவு உடையவர்களாகவும் தமது பதவிகளை மக்கள் பணிக்காகப் பயன்படுத் தக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

மாறாக, தமக்குக் கிடைத்த பதவி இறைவனால் தரப்பட்டது என்ற நினைப்பும் இறைவனால் தரப்பட்ட பதவியை மக்கள் தொண்டு செய்வதற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற மனத்திடமும் இருக்க வேண்டும். அப்போது தான் பதவி மீது அதீத ஆசை ஏற்பட மாட்டாது.

தவிர, பதவி ஆசை ஏற்படும்போது அந்தப் பதவியை யார் பறிக்க வல்லவர்களோ அவர்களைத் தொழுது பணியாற்றுகின்ற பரிதாப நிலை ஏற்படும்.

எனவே பதவி மீது ஆசை கொள்ளாமல், கிடைத்த பதவியைக் கொண்டு மக்கள் பணி செய்யும்போது, அதற்கு மக்களின் வாழ்த்தும் இறைவனின் ஆசியும் நிச்சயம் கிடைக்கும்.

அரச பதவி என்பது அறுபது வயதுடன் ஓய்வுக்கு வருவது. அறுபது வயது என்பது இன்றைய காலத்தில் மிக வேகமாக நகரக்கூடியது.

எனவே 60 வயது வரை மட்டுமே பதவிக் கதிரையில் இருக்கக்கூடிய அதிகாரிகள், எந்தளவுக்கு தங்களின் பதவிக்குரிய அதிகாரங்களைக் கொண்டு பொது மக்களுக்கு சேவையாற்ற முடியுமோ அந்தளவுக்கு அந்த சேவையை விரைவாகவும் முழுமையாகவும் வழங்க வேண்டும்.

அந்த வகையில் எங்கள் தமிழ் அதிகாரிகள் இது விடயத்தில் மிகவும் நேர்மையாக நடந்து கொள்வது அவசியமாகிறது.

அதாவது இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிரான போக்கை ஆளுந் தரப்புகள் கொண்டுள்ளன.

தமிழர்களின் நில ஆக்கிரமிப்புத் தொடக்கம் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு எனப் பல தளங்களிலும் நம் தமிழ் இனத் துக்கு ஆளும் உயர் வர்க்கம் அநீதி இழைக் கின்றது.

இவ்வாறு இழைக்கப்படும் அநீதிக்கு தமிழ் அதிகாரிகளின் ஒத்துழைப்பும் அரச தரப்புக்குத் தேவையாக இருக்கிறது.

இங்குதான் பதவி ஆசை காரணமாக அரச தரப்பின் நியாயமற்ற செயல்களுக்கு எமது அரச உயர் அதிகாரிகள் உடந்தையாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

ஆம், எங்களைக் கொண்டே எங்களை வீழ்த்துகின்ற வஞ்சகத்தனத்துக்கு நம்மவர்களை இழுத்துப் போடுகின்ற தூண்டில்களாகப் பதவிகளே பயன்படுத்தப்படுகின்றன.

ஆகையால் பதவிகளைப் பொருட்படுத்தாமல் எது சரியோ! அதனைச் செய்வதுதான் தர்மம்.

அறுபதில் போகின்ற பதவி ஐம்பத்தைந்தில் போனால் என்ன என்றெண்ணி; நல்லது செய்தால் அது என்றும் நிலைத்த புகழைத் தந் தருளும்.

# இலங்கையில் 8 மாவட்டங்களில் நிலைமை மிகவும் மோசம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 8 மாவட்டங்களில் கோவிட்-19 வைரஸ் பரவல் மிக மோசமாக இருப்பதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருணாகல், கண்டி, மாத்தளை, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கொரோனா பரவல் வரும் நாட்களில் பாரதூரமானதாக இருக்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் காணப்படும் தொற்று நோய் பரவல் நிலைமையானது ஏனைய மாவட்டங்களில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என அந்த சங்கம், அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

குறித்த மாவட்டங்களில் சரியான பரிசோதனைகளை நடத்தி தொற்றாளர்களை வைத்திய சாலைகளில் அனுமதிப்பது மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் காண்பது என்பனவும் தாமதமாகி இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் நவின் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

இந்த பாரதூரமான நிலைமையில் இருந்து தப்பிக்க உடனடியாக பயணத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார ஆலோசனைகளை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அந்தச் சங்கம் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஞா)

### சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மாட்டு இறைச்சி மன்னாரில் பறிமுதல்

(மன்னார்)

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள உயிலங்குளம் பகுதியில் நேற்று காலை அனுமதி இன்றி வீட்டில் வைத்து மாடு ஒன்றை வெட்டி இறைச்சிக் கடையில் வைத்து விற்பனை செய்ய முயன்ற நிலையில் பொது சுகாதார பரிசோதகர்களினால் குறித்த இறைச்சி மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரோய் பீரிஸ் தெரிவித்தார்.

(ஞா-285)

### மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** பலாலி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அக்கரை, வளலாய், வாதரவத்தை, பெரிய பொக்கணை, ஐஸ் தொழிற்சாலை, பொலிகண்டி, அண்ணா சிலையடி, பாரதிவீதி கம்பர் மலை, இலந்தைக்காடு, கல்லுவம், கணபதி ஆலை கொற்றாவத்தை, கெருடாவில் கொற்றாவத்தை, மயிலியதனை, நாச்சிமார் கோவிலடி பொலிகண்டி நவிண்டில்- உடுப்பிட்டி வதிரி வீதி, நெடியகாடு, பழைய காவல் நிலையம் வல்வெட்டித்துறை, பொக்கணை, பொலிகண்டி, புறாப்பொறுக்கி, சந்நிதி கோவில், சிதம்பரா கல்லூரி, தொண்டைமானாறு, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை சந்தி, உடுப்பிட்டி நூலகம், வல்லை, வல்வெட்டித்துறை- சிவன் கோவில் வீதி, வல்வெட்டித்துறை வன்னிச்சி, வல்வெட்டித்துறை வீதி கல்லறைக்கு அருகில் உடுப்பிட்டி, வெள்ளைவீதி உடுப்பிட்டிச் சந்தி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ஆச்சிபுரம், ஆசிக்குளம், அறவந்துலாவ, எல்லப்பர் மருதங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகா மயிலங்குளம், மதுரநகர், கல்நாட்டினகுளம், பழையனூர், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம், ட்ராக்-07, பாவற்குளம், நெளுக்குளம் நீர் வழங்கல் சபை, அறுகம்புல்வெளி, பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம், கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பாண்சின்ன குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திர குளம், சாம்பல் தோட்டம் வீட்டுத்திட்டம், விநாயகபுரம் வீட்டுத் திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பற்றறிவு, கற்றறிவு, முற்றறிவு



தூலம், சூக்குமம், காரணம் என்ற மூன்று சொற்களைக் கேட்டிருப்பீர்கள். இவற்றுள் தூலமாகியது உடல், சூக்குமமாகியது உயிர், காரணம் என்பது பிரம்மம் அல்லது மெய்ப்பொருள். இந்த உடலுக்கு மையப்புள்ளி, சுற்று வட்டம் இரண்டும் உண்டு. அதாவது உடலுக்கு எல்லை உண்டு. உயிருக்கும் மையப்புள்ளி உண்டு ஆனால் அதனுடைய சுற்றுவட்டம் ஒரு எல்லைக்குள் அடங்காது. மெய்ப்பொருளுக்கோ மையப்பள்ளியும் இல்லை, சுற்று வட்டமும் இல்லை. அந்த உயிருக்கு மனமானது விரியும் போது அது பிரம்மம் வரையில் போவதனால் சுற்றுவட்டம் இல்லை.


ஆனால், பிரம்ம நிலைக்கு மையப்புள்ளியும் இல்லை, சுற்று வட்டமும் இல்லை, இங்கு பிரம்மமே அறிவாக இருப்பதனால் அந்த பிரம்மம் என்ற நிலையிலே முற்றறிவு **(Total Consciousness)**. அது உயிராக வந்ததனால் இயங்கிப் பெற்ற சுற்றறிவு **(Character)** இதுவரையில் இயங்கிப்பெற்ற பதிவுகள் அனைத்தையும் அடக்கமாகக் கொண்டது. அதற்கும் மேலே இந்த உடல் வரையில் நின்று புலன்கள் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கும் போது அது பற்றறிவு.

இவ்வாறாகத் தானே பற்றறிவு, கற்றறிவு, முற்றறிவு என்று மூன்றாகச் சொல்லலாம். இந்த மூன்று நிலையிலும் எங்கேயும் இருப்பது அறிவு ஒன்றுதான் இருக்கும் நிலைக்குத் தகுந்தவாறு, அதனுடைய தன்மைக்குத் தகுந்தவாறு வேறுபடுகின்றது. தெளிவினாலே, தவத்தினாலே, பல பிறவிகள் எடுத்த தொடர்பினாலே அவர்களுடைய ஊாயசயஉவநச இந்த மூன்று நிலையிலே எங்கே வேண்டுமானாலும் நிற்கலாம். ஆனால், விகிதாசாரம் என்ன? அந்தந்த இடத்தில் ஏற்பட்ட பதிவு அழுத்தம், வலுவு எந்த விகிதாசாரத்தில் இருக்கிறதோ அந்த அளவு அதிகமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைத் தொகுதியில் தீப் பரவல்

## 4 வர்த்தக நிலையங்கள் சேதம்



(கொழும்பு)

ரக்வானை நகரில் சந்தை தொகுதியொன்றில் இடம்பெற்ற தீப்பரவலினால் 4 வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்த தீப்பரவல் ரக்வானை பொலிஸாராலும் இரத்தினபுரி மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினராலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (நி-4)


# விமானத்தில் இனி 75 பயணிகள்

(கொழும்பு)

இலங்கைக்கான விமான சேவையில் ஈடுபடும் அனைத்து விமான நிறுவனங்களும் தமது பயணிகளின் எண்ணிக்கையை 75 ஆக மட்டுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் இதனை தெரிவித்துள்ளார். (நி-4)

# விபத்தில் இளைஞன் உயிரிழப்பு



(கொழும்பு)

அம்பலாந்தோட்டை - மல்பெத்தாம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் நிதி நிறுவனமொன்றில் பணிபுரிந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அம்பலாந்தோட்டை - தங்கல்லை நோக்கி பயணித்த உந்துருளி பாதையை கடந்த நாய் ஒன்றிற்காக நிறுத்தப்பட்ட போது பின்னால் வந்த டிப்பர் ரக வாகனம் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்போது உந்துருளியின் சாரதி வீதியை விட்டு விலகி வீசப்பட்டுள்ளதுடன், பின்னால் அமர்ந்து வந்த இளைஞர் டிப்பர் வாகனத்தில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதற்கமைய டிப்பர் ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)

# விடுதலைப்புலிகள் அமைப்பினைவிட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது

## இராஜாங்க அமைச்சர் ஜயந்த

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினை விட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்கவே 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.**

ஆகவே இவ்விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இணையவழியூடாக இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்ற காலத்தில் இருந்து மே தின கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்த முடியாத துரதிர்ஷ்ட நிலை ஏற்பட்டது.

நாட்டு மக்கள் அனைவரும் பொது சட்டத்தை பின்பற்ற வேண்டும். பொது சட்டத்திற்கு புறம்பாக ஒரு தரப்பினர் செயற்படும் போது முரண்பாடுகள் மாத்திரம் தோற்றம் பெறும்.

தமிழ் பிரிவினைவாதம் நாட்டின் அரசியலமைப்பிற்கு முரணாக செயற்பட்டதால் பாரிய விளைவுகள் நாட்டில் தோற்றம் பெற்றது.

30 வருட கால யுத்தம் பல்வேறு தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பினை நாட்டிலிருந்து இல்லாதொழித்தார்.

தமிழ் பிரிவினை வாதத்தை விட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது. இதன் விளைவை 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின்ஊடாக விளங்கிக் கொள்ள முடிந்தது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு இதற்காகவே 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளார்கள்.

சவால்களை வெற்றி கொள்ள அனைத்து தரப்பினரும் ஒன்றுபட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# 2 ஆவது டோஸ் இதுவரை 85,653 பேருக்கு

(கொழும்பு)

நாட்டில் இதுவரை 85 ஆயிரத்து 653 பேருக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ளவர்களுக்கு செலுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# ஹரினுக்கு இதய அறுவை சத்திரசிகிச்சை

(கொழும்பு)

கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வரும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ விற்கு இதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அண்மையில் பாராளுமன்றில் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டிருந்த நிலையில், அது கொழும்பு அரசியலில் பேசுபொருளாக மாறியது.

இந்நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கைது செய்யப்பட இருப்பதாக அந்த நேரத்தில் பரவலாக பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 43 மில்லியன் ரூபா பண மோசடி

## நால்வர் கைது

(கொழும்பு)

பிரசித்தி பெற்ற இரும்பு தொழிற்சாலையொன்றிற்கு சொந்தமான தனியார் வங்கிக் கணக்கொன்றிலிருந்து போலியான காசோலைகளை வழங்கி 43 மில்லியன் ரூபா பணத்தை பெற்றுக் கொண்ட, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுவொன்றின் 4 அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் துறை பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார். (நி-4)

# தர நிர்ணய நிறுவக தலைவர் பதவி விலகல்

(கொழும்பு)

இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் தலைவர் நுஷாட் பெரேரா தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

மீண்டும் தனியார் நிறுவனமொன்றில் இணையும் நோக்கில் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்க ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு அனுமதி

(கொழும்பு)

கொவிட் 19 தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு கொவிட் நோய்க்கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே அனுமதித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி இதனை தெரிவித்துள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைக்குண்டு...

கிழமை முற்பகல் அப்பகுதியில் கைக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக் கப்பட்டது.

பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்று இக் கைக்குண்டை அகற்றுவர் என தெரிவிக்கப்பட்டது. (ஞா-60)

## வரணியில்...

இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வரணி-சந்தைப் பகுதியில் நின்ற இளைஞனை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வெட்டிக் காயப்படுத்திவிட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதில் கரம்பைக்குறிச்சி வரணிப் பகுதியைச் சேர்ந்த 22 வயதான பிரசாந் என்ற இளைஞன் காயமடைந்த நிலை யில் சிகிச்சைக்காக மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-30,103)

## 1,891 பேருக்கு...

நாட்டில் கோவிட் -19 நோய்த் தொற் றால் நேற்று ஒரே நாளில் ஆயிரத்து 891 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப் பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் ஒரே நாளில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும். நேற்று முன்தினம் ஆயிரத்து 716 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 753 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக் கப்பட்டுள்ளனர். (ஞா)

## வடக்கில் 7...

தனிமைப்படுத்தல் விடுதியில் அனும திக்கப்பட்டிருந்த 2 பேருக்கும், யாழ்.மாநகர சுகாதார வைத் திய அதிகாரி பிரில் ஒருவருக்குமாக, 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது. அவர்களில் இருவர் பொலிஸ் உத்தியோகஸ்த்தர்கள்.

வவுனியா வைத்தியசாலை தனிமைப் படுத்தல் விடுதியில் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பூவரசம் குளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒரு நோயாளிக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்றும் பணிப்பாளர் தெரிவித்தார். (ஞா-18,33,250)

## கொரோனாத்...

லணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்று தீவிர மடைந்தவரும் நிலையில் மண்டபங்கள் மற்றும் பொது இடங்களில் திருமண நிகழ்வுகள், விருந்துபசாரங்கள், கூட்டங் களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் வீடுகளிலும் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகள், விருந்துபசா ரங்கள், கூட்டங்களை நடத்த அனுமதி யில்லை என கூறியிருக்கும் இராணுவத் தளபதி, கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வரும்வரை அத்தியாவசிய தேவையில் லாமல் அயல் வீடுகளுக்குச் செல்வது, உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் செல்வது மற்றும் உறவினர்களை அழைப்பதையும் நிறுத்துமாறு நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஞா)

## காங்கேசன்...

தகவலின் அடிப்படையில் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் மதுபோதையில் புத்தர் சிலையை உடைத்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சந்தேகநபர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக் கப்பட்டுள்ளார். (ஞா-18,33)

## தி.மு.க. அமோக...

ஆட்சியமைக்கத் தேவையான 117 தொகுதிகளைக் காட்டிலும் அதிகமான தொகுதிகளில் தி.மு.க. முன்னிலை வகிப்பதால் வெற்றி வாய்ப்பு தி.மு.க.விற்கு உறுதியாகியுள்ளது. பத்து வருடங்க ளுக்குப் பின்னர் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி அமையவிருக்கிறது. மு.க.ஸ்டா லினுக்கு பல்வேறு அரசியல் தலைவர் களும் தங்களது வாழ்த்துகளைத் தெரி வித்துவருகின்றனர்.

இந்நிலையில், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மு.க.ஸ்டாலினுக்கு எய்ம்ஸ் என்று எழுதப் பட்ட செங்கலைப் பரிசாக வழங்கி வாழ்த் துத் தெரிவித்துள்ளார். இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை உதயநிதி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இந்தப் புகைப்படம் சமூகவலைத்தளங்க ளில் பலராலும் பகிரப்பட்டுவருகிறது. (ஞா)

# காரைநகரில் இன்றுமுதல் கொரோனா கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் கோவிட் - 19 கட்டுப்பாட்டு வாரம் நடை முறைப்படுத்தப்படுகின்றது என்று சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் யோ. யதுநந்தனன் அறிவித்துள்ளார்.

மேலும், இந்த வாரத்தில், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருடன் இணை ந்து பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸ், இராணுவத் தரப்பினரும் இணைந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இதன்போது, கொரோனாத் தொற்று குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும். அத்துடன் கடைகள், சந்தைகள், பேருந்துகள், பொது இடங்களில் சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின் றனவா என்று கண்காணிக்கப்படும்.

சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற் படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் மருத்துவர் தெரிவித்துள் ளார். (ஞா)

## சுகாதார...

இன்றைய தினம் தேர் திருவிழா நடை பெறவுள்ள நிலையில் நேற்றைய தினம் சப்பைரத திருவிழா நடைபெற்றது.

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் காரைநகர் பொது சுகாதார பரிசோ தகர் ஆகியோரின் அறிவுறுத்தல்களை மீறி ஆலயத்தில் பெருமளவானோர் சப் பைரத திருவிழாவில் கூடியிருந்தனர்.

சுகாதார விதிமுறைகள், கட்டுப்பாடு களை மீறி 50இற்கும் மேற்பட்டோர் உரிய முறையில் முகக் கவசங்கள் இன்றியும், சமூக இடைவெளிகளை பேணாதும் திரு விழாவில் கூடி இருந்துள்ளனர்.

அதனை அடுத்து, ஆலயத்திற்கு சென் றிருந்த சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர் உள் ளிட்டோர் ஆலய திருவிழாவினை நிறு த்தி, ஆலய குருக்கள், உபயகாரர், ஆலய நிர்வாகத்தை சேர்ந்தோர் உள்ளிட்ட நான்கு பேரை தனிமைப்படுத்தி உள் ளனர். (ஞா-33)

## தனியார் பேரு...

றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "நாட்டில் கொரோனாக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக வகுப்புகள், பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்பன இடைநிறுத்தப்பட்டுள் ளன.

அலுவலகங்களுக்குக் குறைந்த எண் ணிக்கையிலேயே ஊழியர்கள் அழைக் கப்படுகின்றனர். இதன் காரணமாக பேரு ந்துகளில் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையைக் கருத் தில்கொண்டு இன்று திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 25 வீத பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடிவெடுத்துள்ளோம்" என்றார். (ஞா)

## நோயா..

கள் மேற்கொள்ள ப்பட்டு வருகின் றன.

அதன் முடிவு கள் சில நேற்று இரவு வெளியாகிய நிலையில் பிராந் திய சுகாதார திணை க்களத்தில் கடமை யாற்றும் நோயா ளர் காவு வண்டி சாரதி ஒருவருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

குறித்த சார தியை கொரோனா வைத்தியசாலை க்கு அனுப்பிவைப் பதற்கும், அவர்க ளுடன் தொடர்புடை யவர்களை சுய தனிமைப்படுத்த வும் சுகாதார பிரி வினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஞா-250)

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 02.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2764
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 24 30 36 39
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/05/02
சீட்டிழுப்பு இலக்கம் 4469
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 0 0 9 7 9
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 02/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 334
ஆங்கில எழுத்து I
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 11 30 52
NATIONAL LOTTERIES BOARD

தன நிதானய
திகதி -2021.05.02
சீட்டிழுப்பு இலக்கம் - 506
H 12 47 56 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

தரு திரி சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 36 திகதி 02/05/2021
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 23 41 44 74
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1265
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 02.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 132,581,697
வெற்றி இலக்கங்கள் 46 54 69 71
ஆங்கில எழுத்து A
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3595
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 02.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,489,361
வெற்றி இலக்கங்கள் 02 16 22 68
ஆங்கில எழுத்து Q
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 720
மஞ்சள்
02.05.2021
ஞாயிறு
G 21 31 56 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,989,615
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1439
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 02/05/2021
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் U 24 37 49 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் 54,455,202/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் 5,252,569/=
திகதி : 02.05.2021
வெற்றி வாரம் : 3146
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள் 08 27 35 51
தனுசு
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,501,060

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் சிங்கப்பூரில் இருந்து இறக்குவோம்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

"இலங்கையில் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படும்போது, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது." இவ்வாறு அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "இலங்கையில் ஒட்சிசன் தயாரிக்கும் நிறுவனங்களின் திறன் மற்றும் கையிருப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அவசியமான அளவு ஒட்சிசன் இதுவரையில் கையிருப்பில் உள்ளது.

மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த, ஏனைய இடங்களிலும் ஒட்சிசன் வழங்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது" என்றார். (ஞ)


## உடனடி வேலைவாய்ப்பு

K.K.S வீதி கோண்டாவிலில் இயங்கும் பீட்சா நிறுவனத்திற்கு Delivery boy தேவை.
சம்பளம்: நாளொன்றுக்கு 750/-
(C-2094)
தொடர்புக்கு: 077 991 2628

## ஆசிரியர் தேவை

கோண்டாவிலில் இயங்கும் தொழிற்கல்வி நிறுவனத்தில் கேக் மேக்கிங் கோர்ஸ் (cake making course) கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
(C-2094)
தொடர்புக்கு: 077 991 2628

## பணிப் பெண் தேவை

இணுவிலில் உள்ள வீட்டில் தங்கி நின்று பணியாற்ற வீட்டுப் பணிப் பெண் தேவை.
(6766)
☎ - 077 401 6412

## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் [பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்] பலாலி வீதியை முகப்பாக கொண்ட கட்டடத்தில்
- 3 அறைகள், 2 அறைகள் கொண்ட தளபாடமிடப்பட்ட மாடி மனைகள் (Flat).
- இணைந்த குளியலறையுடன் தளபாடமிடப்பட்ட சமையல் வசதி கொண்ட அறைகள்.

(6780)
077 105 6694

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576
(C-2033)


# தம்மிக்க பெரேரா தயாரித்த கொரோனா பாணி பயனற்றது

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பெரேரா தயாரித்த கொரோனாப் பாணி கொரோனாவில் இருந்து எவ்வகையிலும் பாதுகாப்பளிக்கவில்லை என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் உத்தரவுப்படி ராஜரட்டை பல்கலைக்கழகத்தால் அநுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 68 கோவிட் - 19 நோயாளிகளுக்கு தம்மிக்க தயாரித்த கொரோனா பாணி வழங்கி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இதனை எடுத்துக்கொண்டு எவரிடத்திலும் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை என ராஜரட்ட பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் சேனக பிலபிட்டிய ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போது கூறினார்.

தம்மிக்கவின் இந்த கொரோனாப் பாணியை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோர் ஊடகங்கள் முன்னிலையில் அருந்திய நிலையில் இந்தப் பாணி குறித்த நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டது என்றார். (ஞ)


## வழங்குனர்களை பதிவு செய்தல்

வடமாகாணத்தில் கட்டட நிர்மாண வேலைகளை முன்னெடுக்கும் எமது நிறுவனத்துக்கு கீழ்வரும் பொருட்களை தொடர்ச்சியாக வழங்கக்கூடியவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

1. மணல் 2. 3/4" கருங்கல் சல்லி 3. 1"கருங்கல் சல்லி 4. 6"- 9"கருங்கல் 5. கிரவல்
(6778)
Whatsapp / Direct : 077 707 9393

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணத்துறையில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் வாய்ந்த தொழிநுட்ப உத்தியோகத்தர் தேவை.
(6778)
greentagpvtltd@gmail.com
077 077 0003

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைகேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
(6777)
தொடர்பு: ராஜ் - 077 679 6623

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.04.2021 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது புதல்வன்

அமரர்

**செல்வன் இராமச்சந்திரன் தனுசன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.05.2021) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவன்குறிச்சி,
இலக்கணவத்தை, உடுப்பிட்டி. குடும்பத்தினர் (C-2093)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## ஹோட்டல் மனேஜ்மன்ட்

அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்



பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்.
100% வேலைவாய்ப்பு
இலவச ஆங்கில வகுப்பு
தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்
ஆரம்பம் 07.05.2021 வெள்ளிக்கிழமை



+Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)
+Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)
T.P: 076 057 9999, 021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna. (C-2094)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-2059)
0768226240 DHL

## அண்ணா

EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2060)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.